பாலபோதினி உபபாட புத்தகம் — VIII

# சாவித்திரி



சுன்னாகம்:

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

# சாவித்திரி

நவாலியூர்,
க. சோமசுந்தரப் புலவர் அவர்கள்
எழுதியது

சான்றிதழ் இல. சபீபி / கு / 271

பாலபோதினி உபபாடபுத்தகம் - VIII
சாவித்திரி - க. சோமசுந்தரப்புலவர்

1952ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29ந் திகதி வெளிவந்துள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் உதவி நன்கொடை பெறும் தன்மொழிப் பாடசாலைகளுக்கும், இரு பாஷைப் பாடசாலைகளுக்கும், ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19(A)-ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய இப் புத்தகம் ஒரு நூல்நிலையத்திற்குரிய புத்தகமாக உபயோகித்தற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஜீவானந்த நாணயக்கார
செயலாளர்
பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை,
மலாய் வீதி, கொழும்பு 2,
28-9-65.

சுன்னாகம்:
வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிப்புரிமை] 1966 [விலை சதம் 75

ஆறும் பதிப்பு (மறுபிரசுரம்) 1966

சுன்னுகம் :
திருமகள் அழுத்தகம்

இப்புத்தகம் வாழைச்சேனைக் கடதாசியில் அச்சிடப்பட்டது.

[உரிமை பதிப்பகத்தார்க்குரியது]

# அணிந்துரை

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்'

என்ற திருவள்ளுவருக்கு இலக்கியமான கற்புத் தெய்வங்களுள் ஒரு தெய்வம் சாவித்திரி. பெண்ணுலகம் பின்பற்றவேண்டியதொரு சூழாமணி சாவித்திரி. இப்படிப்பட்ட சாவித்திரியின் கதை மகா பாரதத்தில் வருகின்றது.

இந்தத் தலைசிறந்த கதையை,

"அன்னநடை பிடியினடை யழகுநடை
யல்லவென வகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் சேய்யுணடை
பயின்றதமிழ்ப் பாவை யாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
யெனப்பயிற்றி வைத்த வாசான்
மன்னுமருள் நாவலன்றன் னழியாநல்
லொழுக்கநடை வாழி வாழி."

என்ற அருமந்த பாடலின் உயிர்ப்பொருளான ஆறுமுக நாவலர் அவர்களின் வசன பரம்பரையில் வசனஞ் செய்திருக்கின்றார்கள், ஈழத்துப் புலவர் சிகாமணியாகிய சோமசுந்தரப் புலவர் அவர்கள். புலவர் அவர்களின் பாடல்கள் போலவே பொன்னேபோற் போற்றத்தக்கது இந்த வசனம். ஆகாயகங்கை நிலத்திற் படர்ந்தாற்போலக் கலங்காமல் இடையே தடங்காமல் வெகு தெளிவாய் ஒழுகித் தவழுகின்றது இந்த வசனம்.

கதையில், மெய்ப்பாட்டுக்குரிய இடங்களில், புலவர் அவர்கள் தமது கவிதை உள்ளத்தைக் கட்டியாண்டு, வசன நடையிற் செய்யுள்நடை விரவாமல், வசன மரபைப் பேணிக் காத்திருக் கின்றார்கள். தம்வயமின்றிக் கவிதை குடிகொண்ட இரண்டோர் இடத்தில்,

"தேன்போதிந்த இன்பமொழிச் சேயிழையே வாராய்
தீங்குரலிற் பூங்குயில்கள் கூவுவன ஓராய்"

என்றிங்ஙனம் கவிதை செய்திருக்கின்றார்கள். கவிதா சமயங்களில், வசனங்களிலே எதுகை மோனை பண்ணி வசன மரபை அழிக்காது கவிதை செய்த இந்தத் திறம் பாராட்டித் தீராது.

வசன மரபு செய்யுள் மரபு இருமரபுந் துய்ய இச் சாவித்திரிகதை, படித்து முதிர்ந்தோரே யன்றிப் பள்ளிச் சிறுவர்களும் நன்கு பயிலும் பொருட்டுச், சிறுச்சிறு பாடங்களாய் அமைந் திருக்கின்றது. அன்றிப் பக்க இறுதிகளில் அரும் பதங்கள் தொடர்களுக்கு விளக்கம் கொடுக்கப் பட்டு மிருக்கின்றது.

இவ் வசனத் தேன் ஒவ்வொரு தமிழ் மகளின் கரகமலங்களிலும் ஒழுகி, இருதய கமலந் தோறும் துளிசெய்வதாக.

சைவாசிரியகலாசாலை,
திருநெல்வேலி, சி. கணபதிப்பிள்ளை
15—2—55

# ஆசிரியர் வரலாறு

யாழ்ப்பாணத்து வலிகாமம் மேற்குப் பகுதியிற் றிகழ்வது மானிப்பாய்க் கோவிற்பற்று. அதனைச் சார்ந்தது நவாலியூர். அது மருதமும் நெய்தலுங் கலந்த நிலப்பகுதியை யுடையது. பல்லாண்டுகளாகக் கல்விச் சிறப்பிலும் செல்வப் பெருக்கிலும் மேம்பட்டு விளங்கி வருகின்றது.

நவாலியூரிலே, இற்றைக்கு ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்கு முன்னே, வன்னியசேகர முதலியார் என்பவர் ஒருவர் குடியேறிச் சீரும் சிறப்பும் பொருந்த வாழ்ந்து வந்தார். அவருடைய ஒன்பதாவது தலைமுறையிலே அருமையினர் என்று வழங்கும் ஆறுமுகம்பிள்ளை யென்பவர் பிறந்தார். அவர் ஒரு சிறந்த தமிழறிஞர். கந்தபுராணத்துக்கும் பெரியபுராணத்துக்கும் சிறந்த உரை சொல்லுவதில் வல்லவர். அவருக்குக் கதிர்காமர் என்னும் புதல்வர் இருந்தார். அவரை அருமையினர் கதிர்காமர் என்று ஊரார் வழங்குவர். அவரும் ஒரு சிறந்த தமிழறிஞர்.

அருமையினர் கதிர்காமர் இலக்குமிப்பிள்ளை யென்னும் பெண்ணை மணஞ்செய்தார். இலக்குமிப்பிள்ளை, கோண்டாவிலடிச் சிங்கைநாயக முதலியின் வழித்தோன்றலாகிய வினாசித்தம்பிக்கு மகள். இலக்குமிப்பிள்ளை கடவுள் பத்தியிலும் அடியார் பத்தியிலுஞ் சிறந்து விளங்

கிஞர். பசித்தோர்க்கு இன்னடிசில் கொடுத்துப் பேணி மகிழ்வதே அவரின் வாழ்க்கைக் குறிக் கோள். மக்கட்பேறு இல்லாத குறை அவர்கள் இருவரையும் நாடோறும் வருத்துவதாயிற்று. நவாலியூரிலுள்ள அட்டகிரி முருகப்பெருமானே நோக்கிப் பல்லாண்டு நோன்பிருந்தனர். அதன் பயஞகக் கி. பி. 1878ஆம் ஆண்டுக்குச் சமமான விக்கிரம ஆண்டு வைகாசித் திங்கள் இருபத் தைந்தாம் நாள் சனிக்கிழமை முற்பகலிற் பரணி நாளிற் புலவர் பிறந்தார்.

பேருவகை கொண்ட பெற்ருேர் முருகப் பெருமானுக்குச் சிறப்புவகையான பூசைகள் செய் வித்தனர். பருத்தித்துறையி லிருந்த ஆறுமுகப் பெரியார் என்னும் சோதிடரிடஞ் சாதகம் எழுது வித்தார். ஆறுமுகப் பெரியார் கோள்களின் நிலேகளேத் திட்பமாய்க் கணித்து, இச்சாதகன் இணேயற்ற பெரும் புலவஞக விளங்குவான்', என்று கூறிஞர்.

சோமசுந்தரப் புலவருக்கு ஐந்தாண்டு வந்த தும், மானிப்பாயி லிருந்த அருணுசலப் புலவ ரைக் கொண்டு ஏடு தொடக்குவித்தனர். அரு ணுசலப் புலவரிடம் ஆத்திசூடி, கொன்றைவேந் தன், விரும்பித் தொழுவார் முதலிய நீதி நூல் களேக் கற்றுக்கொண்ட பின்னர், எண்கணிதமும் நிகண்டும் கற்றனர். புலவருடைய கல்வித் திறமை யைக் கண்ட ஆசிரியர், குமரேசர் சதகம், தண்டலேயார் சதகம் முதலிய சிறு நூல்களே ஆசையுடன் கற்பித்தனர். தமிழை மிக விரும்பிக்

கற்றுவருதலை யறிந்து, புலவர் ஆங்கிலமும் கற்பது எளிதாகுமென்று கருதி மானிப்பாயி லிருந்த மாரிமுத்து உபாத்தியாயர் வைத்து நடாத்திய ஆங்கிலப் பாடசாலையிற் சேர்த்து விட்டனர்.

ஐந்தாண்டுகள் ஆங்கிலங் கற்று எட்டாம் வகுப்பிற் சித்தியடைந்தனர். மேலும் ஆங்கிலங் கற்க விரும்பி, நவாலியூர் இராமலிங்க வுபாத்தியாய ரிடம் ஆசிரியப் புகுமுகத் தேர்வு வரையுங் கற்ற னர். புலவரின் பெரிய தந்தை முறையினரான மாதவர் வேலாயுதரின் மகனே இராமலிங்க வுபாத்தியாயர். இவர்களிடம் சிவஞானசித்தி யார், இராமாயணம், கந்தபுராணம் முதலிய நூல் களைப் பாடங் கேட்டனர்.

இராமலிங்க வுபாத்தியாயரின் மகன் வைத் தியலிங்கமும்* புலவரும் இணைபிரியாத நண்பர். இருவரும் நெடுங்காலமாகத் தமிழ் நூல்களைக் கற்று நவாலியூரிலே சைவப் பிரசங்கமும் புராண படனமும் நடாத்தி வந்தனர். புலவர் பதினைந் தாவது வயதிற் பாட்டுப் பாடத் தொடங்கிப் பதினெட்டிற் சிறந்த தமிழ்ப் பாடல்கள் யாக்கும் வன்மையைப் பெற்றுவிட்டார். இராமலிங்க வுபாத்தியாயர் அதனைக் கண்டு புலவரைப் பல முகமாக வூக்கப்படுத்தி வந்தனர்.

அட்டகிரிப் பதிகம், அட்டகிரி முருகன் திரு வூஞ்சல், சாவித்திரி கதை, பசுவின் கதை

---

* மானிப்பாய்க் கிராமசங்கத் தலைவராயிருந்த திரு. வை. மகேசன் அவர்களின் தந்தை.

என்பன புலவர் இளம்பிராயத்திற் செய்த நூல்கள்.

ஆசிரியத் தொழிலே தமக்குப் பெரிதும் இணக்கமானதென்று கண்ட புலவர் வட்டுக் கோட்டையிலுள்ள ஆசிரியர் சின்னத்துரை யென்பவரை யடுத்துச் சித்தங்கேணியைச் சார்ந்த கலட்டியென்னும் இடத்திலே ஓர் ஆங்கிலப் பாடசாலையைத் தொடக்கி இருவருமாக நடத்தி வந்தனர். அங்கே புலவர் ஆங்கிலம், தமிழ், இதிகாசம் என்னும் பாடங்களைச் செம்மையாகக் கற்பித்து வந்தனர். பெற்ரோரும் பிள்ளைகளும் வித்தியாதரிசகரும் புலவரிடம் பெருமதிப்புக் கொண்டனர்.

புலவருக்கு இருபது வயதிலே குருவருட் பேறு கிடைத்தது. தென்னிந்தியாவிலுள்ள பெங்களூரிற் பிறந்த சுப்பிரமணிய சாமியார் என்பவர் நவாலியில் ஓரன்பன் வீட்டில் வந்திருப்பதை யறிந்து, அவரைக் காணச் சென்ருர். சுப்பிரமணிய சாமியார் மெய்யுணர்ந்து அவா வறுத்து விளங்கிய ஓர் யோகியர். சாமியார் புலவரை நன்கு மதித்துச் 'சோமசுந்தரம்! உனக்கு என்ன வேண்டும்', என்று கேட்டார். புலவர், 'வேண்டுவதறிவதும் வேண்டாதறிவதும் சாமிக்கே தெரியும்' என்ருர். சாமியார் சிரித்துக்கொண்டு, "முருகப்பெருமானை வழிபட்டு நீ வேண்டியதெல்லாம் பெறுக", என்று ஓர் இயந்திர அருட்குறியைக் கொடுத்துப் புலவர் வீட்டிலே சிலநாளிருந்து. தம்மூர்க்குப் போயினர்

அந்த அருட்குறியைப் புலவர் வைத்து வழி பாடு செய்து வருவாராயினர். அதன் பெருமை யாற் புலவருக்கு எல்லாக் கல்வியும் சீருஞ் சிறப் பும் நாடோறும் வளர்ந்து வந்தன. நூல்கள் செய்யும் விருப்பமும் உண்டாயிற்று. மருத்துவம், சோதிடம், கைக்குறிநூல், வானநூல் முதலிய கலைகளையுங் கற்றுக்கொண்டார். இப்பொழுது புலவருக்கு இருபத்தெட்டு வயதாயிற்று. புலவ ருக்குப் பெற்றோர் திருமணஞ் செய்து வைக்க விரும்பினர். அதனைப் புலவர் எட்டுணையும் விரும் பாது நிற்றலை யறிந்து தங் குலகுருவாகிய சுப்பிரமணிய சுவாமிமேற் பத்தி செய்து முறை யிட்டனர். சிலநாட் செல்லப் பெங்களூரிலிருந்து சாமியாரின் கடிதம் ஒன்று வந்தது. அதிலே "நீ உன் பெற்றோர் விருப்பத்தின்படி திரு மணத்தை நிறைவேற்று", என்று காணப்பட்டது. புலவர் மணஞ்செய்தற்கு ஒருப்பட்டார்.

சங்குவேலியென்னும் கிராமத்திலே எல்லா வகைச் சிறப்போடும் வாழ்ந்து வந்த புலவரின் தாய் மாமனார் **வேலுப்பிள்ளையின்** மூத்த மக ளாகிய **சின்னம்மையை** மணஞ்செய்து இல் லறத்தை நடத்தி வந்தனர். புலவருக்கு வறுமை யும் பிணியும் வந்து பெரிதும் வருத்தின. வருத் தினும் சிறிதுங் கலங்காது நாமகளிலும் முருகப் பெருமானிலும் பத்தி வைராக்கியங் கொண்டு, தமக்குற்ற வறுமையையும் பிணிகளையும் நீக்கி, நிலையான பேரின்பப் பெருவாழ்வு பெறுதற்கு வழிகாட்ட வேண்டுமென்று குறையிரந்து பல் வேறு பிரபந்தங்களைப் பாடி வருவாராயினர்.

ஆண்டுதோறும் நவராத்திரி விரதம் பூண்டு, அந்நாள்களிலே நாமகள்மேலும் முருகக் கடவுள் மேலும் புதிய புதிய வழிபாட்டு நூல்களைப் பாடி வந்தனர். ஏறத்தாழ இரண்டாயிரத்தைஞ்ஞூறு செய்யுள்கள் அத் தெய்வங்கள் மேலனவாகப் பாடப்பட்டவை.

இப் பாடல்களை அவ்வப்போது எழுதித் தென்னிந்தியச் செய்தித் தாள்களிலும் இலங்கைச் செய்தித் தாள்களிலும் வெளியிட்டும், நூல் வடிவிலே பலவற்றைப் பதிப்பித்தும் வந்தவர், புலவர் அவர்களின் அரும்பெறற் றுணைவர் திரு. க. வேலுப்பிள்ளை அவர்களாவர். பிள்ளை அவர்கள், புலவருக்கு ஊக்கமளித்து (i) **உயிரிளங்குமரன் நாடகம்,** (ii) **இலங்கை வளம்,** (iii) **தால விலாசம்,** (iv) **கந்தபுராண வுண்மை நூற் பொருள்** முதலிய நூல்களை அவ்வப்போது எழுதுவித்தார்கள்.


இங்ஙனம், தமிழ் மொழியைச் சிறப்புறச் செய்த புலவருடைய கீர்த்தி இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் பரந்தது. சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை யடிகள், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணியம்பிள்ளை, சுவாமி விபுலாநந்தர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சு. வெண்ணெய்க்கண்ணனார் முதலியோர் புலவருடைய கவித்துவத் திறமையைப் பாராட்டி வந்தனர். 1927ஆம் ஆண்டிலே புலவருக்குப் பொன்னாடை போர்த்துப் பதக்கமும் பொற்கிழி

யும் பரிசளித்துப் புலவர்ப் பட்டமும் நல்கினர். ஏறத்தாழ இரண்டாயிரத்தைஞ்ஞூறு மாணாக்கரைக் கற்பித்து, நாற்பது ஆண்டுவரையும் ஒரே கலாசாலையில், ஆசிரியராயிருந்து அருந் தொண்டாற்றி 1938ஆம் ஆண்டில் இளைப்பாறினார். இளைப்பாறிய காலத்திற் புலவர் தமது இல்லத்திலே மாணவர்க்குச் சைவ சித்தாந்த வகுப்பும் இலக்கிய வகுப்பும் வைத்து நடத்திக் கல்வியைப் பரப்பி வந்தனர். மாணவரிடத்திலே ஒரு சிறிதேனும் வேதனம் பெருது உணவு முதலிய வசதிகள் செய்து தமிழ் மொழிக் கல்வியைப் பரப்பிவந்தமை புலவரின் சாண்ருண்மைக்கு ஓரறிகுறியாகும்.


கலித்தொகை, திருக்குறள், திருக்கோவையார், சிவஞானபோதம், கந்தபுராணம் என்னும் நூல்களை மிகுந்த சுவையுடன் கற்பிப்பார். செய்யுள்களில் உள்ள அழகுகளையெல்லாம் திட்ப நுட்பமாக வெடுத்து ஆராய்ந்து நகைச்சுவை ததும்பக் கூறி மகிழச் செய்வர். புலவர், தமது எழுபத்தைந்தாவது வயதிலே கி. பி. 1953ஆம் ஆண்டிலே இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடிகளை அடைந்தார். புலவர் எழுதிய பாடல்களின் தொகை ஏறத்தாழப் பத்தாயிரம் என்பர். அவைகள் புலவரின் புகழுடம்பைப் பேணி வளர்க்கின்றன.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை ... ... | iii |
| | ஆசிரியர் வரலாறு ... .... | v |
| 1. | அசுவபதி ஆட்சி ... ... | 1 |
| 2. | சாவித்திரி பிறத்தல் ... ... | 5 |
| 3. | கல்வி பயிலுதல் ... ... | 10 |
| 4. | முனிவர் உபதேசம் ... ... | 18 |
| 5. | சத்தியவானைக் காதலித்தல் ... | 24 |
| 6. | திருமண நிகழ்ச்சி ... ... | 30 |
| 7. | சத்தியவான் இறத்தல் ... | 37 |
| 8. | காலன் வரங் கொடுத்தல் ... | 44 |
| 9. | கணவனுயிர் மீட்டல் ... | 49 |
| 10. | எல்லாம் மங்கலமாதல் ... | 53 |



சாவித்திரி முன்னர், கூற்றுவன் தோற்றுதல்



# சாவித்திரி

## 1. அசுவபதி ஆட்சி

கடல் புடைசூழ்ந்த நெடுநில வுலகத்திலே, புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே, நீர்வள நிலவளங்களாற் சிறப்புற்றோங்கிய மத்திரம் என்னும் ஒரு தேசம் உண்டு. அதனை அசுவபதி யென்னும் பெயரையுடைய அரசன் ஒருவன் ஆண்டுவந்தான். அவன் தமரென்றும் பிறரென்றும் பாராது நீதிசெய்யும் இயல்புடையவன்; சத்தியம் தவறாதவன்; வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை மேகம்போல வழங்கி மகிழும் வள்ளல். அசுவபதி மன்னுயிர்களைத் தன்னுயிர் போல வெண்ணிப் பாதுகாத்து வந்தனன். அதனாற் குடிசனங்கள் அவனைத் தெய்வமென்று நம்பிப் போற்றி வருவாராயினர்.

அசுவபதியின் செங்கோன்மைச் சிறப்பினால் மத்திர தேசத்திலே மாதம் மும்மழை பெய்தது; நதிகளிலும் ஏரிகளிலும் கிணறுகளிலும் எக்

---

புண்ணிய பூமி–கடவுளிடத்து உறைப்பான நம்பிக்கையும் அன்பும் வைத்துத் தீயவழிகளை நீக்கிப் புண்ணிய வழிகளில் ஒழுகும் பெரியோர் பலர் வாழும் இடம். தமர் – தம்முடைய சுற்றத்தவர். பிறர் – அயலார். வள்ளல்–கைம்மாறு கருதாமற் கொடுக்கும் செல்வன். மன்னுயிர் – உலகத்தில் வாழும் புற்பூண்டு முதல் மக்கள் வரையுமுள்ள எல்லாவுயிரும். ஏரி – குளம்.

காலமும் நறும்புனல் நிறைந்திருந்தது. மக்களுடைய முயற்சி அதிகம் இல்லாமலே பூமி ஏராளமான பயனைக் கொடுத்தது. மறையவர் வேத விதிப்படி வேள்விகளைச் செய்தார்கள். ஏனையோர் தங்கள் தங்கள் வருணாச்சிரம தருமங்களுக்கு ஏற்றவாறு நன்னெறியிலே யொழுகினார்கள். தருமம் தலையெடுத்தோங்கியது. பாவம் நிலைபிரிந்து நீங்கியது. பஞ்சம், பிணி, களவு, பகை முதலியவற்றால் வரும் அச்சமின்றிக் குடிசனங்கள் இனிது வாழ்ந்தனர்.

சிவாலயம், விட்டுணுவாலயம் முதலிய தேவ கோட்டங்களில் நித்திக நைமித்திக பூசனைகள் சிறப்பாக நடந்தன. தெய்வ பத்தியும் சன்மார்க்கமும் நாடோறும் வளர்ந்தன. நெல்லுமுயிரன்று, நீரு முயிரன்று, அரசனே உலகத்திற்கு உயிராவன் என்பதை நன்கறிந்து, அவனுடைய ஆணைக் கடங்கி, அவன் குடை நிழற் கீழ் இன்புற்று வாழ்ந்தனர். இவ்வாறு நாடுசெழிக்க நல்லரசு புரிந்த **அசுவபதி** மகாராசாவுக்கு **மாளவிதேவி** யென்னும் பெயரையுடைய மனைவி யொருத்தி யிருந்தாள். அவள் பூரணசந்திரன் போன்ற முகமுடையவள்; அழகிலே செந்திருவையும் பொறையிலே **பூமிதேவியையும்** கற்பிலே **அருந்ததியையும்** ஒத்தவள்; தன் பணிப் பெண்களிடத்தும் மிகுந்த

---

மறையவர் — அந்தணர். வேதம் - இருக்கு, யசுர், சாமம், அதர்வம். தேவகோட்டம் — கோயில். நித்திய பூசனை — நாட் பூசை. நைமித்திக பூசை — ஆண்டு தோறும் செய்யும் சிறப்பான திருவிழாக்கள். தெய்வ பத்தி - கடவுள் இடத்தன்பு. சன்மார்க்கம் — நல்வழி. பணிப்பெண் — ஏவல் செய்யும் பெண்.

அன்பு பாராட்டி வருபவள்; யாழினும் குழலி னும் இனிக்கும் சொற்களைப் பேசுபவள்; வெடு வெடுப்பான வார்த்தைகளை மறந்தும் பேசியறி யாள்; கல்வி கேள்விகளினால் அறிவு நிரம்பியவள்; நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னுங் குணங் களையுடையவள்; நாயகனுக்கு அமுதூட்டுவதிற் பெற்ற தாயைப்போலப் பேரன்புடையவள்; அவனுடைய ஏவற்றொண்டுகளைச் செய்வதில் அடியாளைப் போலப் பணிவுடையவள்; அவனுக் குப் புத்தி சொல்வதில் மந்திரியைப்போல அறி வுடையவள். அவளுக்கு நாயகனே தெய்வம். அவன் வாக்கே வேதம்.

இங்ஙனம் நற்குணமும் நற்செயலும் அமைந்த மாளவிதேவியுடன் அரசன் பூவும் மணமும் போலக் கலந்து இன்பம் நுகர்ந்து வாழ்ந்து வந்தான். கடவுளுடைய அருளினாலே அவர்களுக்குச் சகல பாக்கியங்களும் நிறைந் திருந்தன. ஆனால் மக்கட் பேறில்லாக் குறை யொன்றே அவர்கள் மனத்தை வருத்தியது. அல்லும் பகலும் அதுவே கவலைகொண்டிருந் தார்கள். '**இன்னடிசில் புக்களையும் தாமரைக் கைப் பூநாறும் செய்யவாய் மக்களை**' யில்லாத மனை, என்ன மனை? மக்கட் செல்வம் இல்லா தார் செல்வம் என்ன செல்வம்? மக்கள் மெய் தீண்டி யின்பம் அடையாத யாக்கை என்ன

---

நாயகன் – கணவன். நுகர்ந்து – அநுபவித்து. பாக் கியம் - செல்வம். பேறு – செல்வம். அல்லும் பகலும்– இரவும் பகலும்; எப்பொழுதும் என்றபடி. இன்னடிசில்– இனிமையான உணவு. தாமரைக்கை - தாமரை போலும் அழகிய கை. செய்யவாய் - சிவந்த வாய்.

யாக்கை? குறுகுறு நடக்குங் கோமக்கள் பால் வாய்ச் சிறுகுதலை கேளாச் செவி என்ன செவி? இம்மையிலே இன்பத்தைத் தருவதும் மறுமையிலே சுவர்க்கத்தைத் தருவதும் மக்கட்பேறே யாகும். ஒருவன் சத்தியவிரதமுடையவனாயினு மென்? தானம் தவம் முதலிய நல்லொழுக்க முடையவனாயினுமென்? அவற்றால் அவன் பயன் அடைவதில்லை. மக்கட் பேற்றினாலன்றோ அவன் பெரும் பயனடைகின்றான்.

கற்றவர்கள் சபைக்கு அலங்காரத்தைக் கொடுக்கின்றார்கள். சூரியன் ஆகாயத்தை அலங் கரிக்கின்றான். தாமரை வாவிக்கு அழகைக் கொடுக்கின்றது. அதுபோல, மக்கட் செல்வமே இல்வாழ்க்கைக்கு அலங்காரமாயிருக்கின்றது. அறிவுடைய மக்களைப் பெறுவதினால் தீயவரும் நல்லவர் ஆகின்றார். கண்ணில்லாத உடம்பும், மதியில்லாத இராக்காலமும், மந்திரியில்லாத அரசாட்சியும், அருளில்லாத நெஞ்சும் பழிக்கப் படுதல்போல, மக்களில்லாத வாழ்வும் பழிக்கப் படுகின்றது. மக்கட் செல்வம் வாய்க்காத பாவிக ளென்று உலகம் ஏசும் பழிமொழிக்கு இலக்காக நிற்கும்பொழுது, நாடாட்சியாற் பயனில்லையென்று அரசனும் அரசியுங் கவன்றனர். "நாம் மெய்த் தவம் புரிந்தாயினும் மகப்பேறு அடைதல் வேண்டும்" என்று, ஒருவாறு இருவருந் தேறி அதற்கேற்ற உபாயங்களைச் சிந்தித்துக்கொண் டிருந்தார்கள்.

---

இம்மை - இப்பிறப்பு. சத்தியம் - உண்மை பேசு தல். விரதம் — கொள்கை. வாவி — தடாகம். அருள் - இரக்கம்; கருணை. பழிமொழி — பிறர் பழிக்குஞ் சொல். உபாயம் - வழி.

## 2. சாவித்திரி பிறத்தல்

இங்ஙனம் அசுவபதியும் மாளவிதேவியும் வருந்திக்கொண்டிருக்கு நாளில், ஒருநாள் காவி யுடை தரித்துத் தண்டு கமண்டலங் கைக் கொண்டு, திருநீறு உருத்திராக்கம் ஆகிய சிவ சின்னங்கள் திருமேனியிலே விளங்க நாரத முனிவர் அரசன் அரண்மனைக்கு எழுந்தருளினர். முனிவரைத் தூரத்திலே கண்ட வேந்தனும் தேவியும் விரைந்தெழுந்து, எதிர்கொண்டு சென்று, இன்சொற் கூறி, அழைத்துவந்து, ஆசனத்தி லிருத்தி முறைப்படி வணங்கினர்கள். முனிவர் அவர்களுக்கு ஆசி கூறி இருக்கும்படி பணித்தார். இருந்த பின்பு அவர், அரசனை நோக்கி, "மகா ராசனே! செந்தாமரைபோன்ற உன் திருமுக மண்டலம் வாடியிருப்பதற்குக் காரணம் என்ன? மனத்திலே ஏதும் கவலையுண்டா? பகையரசராற் கேடு வந்துற்றதோ? உனக்குற்ற கவலையை இன்னதென்று கூறு. யான் அதனைப் பரிகரிக்க வல்லேன்," என்று கூறினர்.

அதுகேட்ட அரசன் மகிழ்ந்து கூறுவான்: "முக்காலமு முணர்ந்த முனிவர் பெருமானே! கடவுள் அருளாலும் தேவரீர் ஆசீர்வாதத்

---

தண்டு – யோகத்தண்டு. கமண்டலம் – நீர்கொள் ளும் பாத்திரம். உருத்திராக்கம் – கண்மணி; உருத் திரர் – சிவன், அக்கம் – கண். சிவசின்னம் – சிவனை நினைக்கும் அடையாளம். ஆசனம் – இருக்கை. ஆசீர் வாதம் – வாழ்த்துரை.

தாலும் எனக்கு யாதுங் குறைவில்லை. பகையரச ராற் கேடும் இல்லை. ஆனல் மகப்பேறில்லாக் குறையொன்றே எமக்கிருப்பது. அதுவுந் தேவரீர் ஈண்டு எழுந்தருளிய நல்வரவால் ஒழிந்தது. தேவரீர் தரிசனத்தைப் பெற நாங்கள் முன் னென்ன மாதவஞ் ,செய்தோமோ அறியேம்! பெரியோரைத் துணைக்கொண்டால் எக்குறையும் நீங்கும். மேரு மலையை அடைந்த காக்கை பொன்னிறத்தைப் பெறுகின்றது. ஆற்று நீரோடு சேர்ந்த அழுக்குநீர் தீர்த்தமாகின்றது. பாலோடு சேர்ந்த நீர் பாலாகின்றது. பூவோடு சேர்ந்த நார் கடவுள் முடிக்கு அணியாகின்றது. சந்திரனை எய்திய முயற்கறை உலகத்தாராற் றொழப்படு கின்றது. இறைவன் கண்டத்தினைப் பொருந்திய கொடிய நஞ்சு தேவர்களாலும் போற்றப்படு கின்றது. சந்திரன் இறைவனின் திருச்சடையை எய்தியதினல் தன் குறை நீங்கிச் சுகமடைகின் றன். பெரியோரை அடைந்தமையினற் சிறி யோரும் பெரியோராகின்றார்கள். பெரியோ ருடைய கிருபையினலே தருமம் நிலையும்; சம்பத்து உண்டாகும்; ஆபத்து நீங்கும்; சந்ததி தழைக்கும். பெரியோருடைய கிருபையைப் பெற் றோருக்குத் தவம், தானம் முதலியன வேண் டாம். அவர்கள் பிறப்பென்னும் சாகரத்தையுந் தாண்டி முத்தியாகிய கரையை யடைந்து ஆனந்தமடைவார்கள், என்று நீதிநூல்கள் கூறு கின்றன. சுவாமி! தேவரீரை எங்கள் தவப்

---

மகப்பேறு — பிள்ளைச்செல்வம். ஈண்டு — இங்கு. கிருபை - அருள். தவம் - வழிபாடு. தானம் - கொடை. சாகரம் — கடல்.

பயனுல் இங்கே தரிசிக்கப் பெற்ரேம்; நெஞ்சச் சஞ்சலமும் நீங்கிற்று.''

அரசனது பக்தி விநயத்தையும் மனக்கவலையையுங் கண்ட நாரதர் மனமகிழ்ந்து, " அரசனே! கவலை யொழிக. ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். உன் குறையை யான் முடிப்பேன். அதற்கோர் உபாயமுண்டு. அதனையுங் கேள்: நீயும் உன் மனைவியும் சாவித்திரியைச் சரணடைந்து தவ முயலுமின். அவளருளால் உமக்கு மகப்பேறுண்டாகும்'' என்று கூறி, அதற்குரிய விரதமுறையையும் அறிவித்து மந்திரோபதேசமுஞ் செய்து போயினர்.

நாரதமுனிவர் சொற்படி இராசனும் இராணியும் சாவித்திரி நோன்பியற்றி வந்தனர். அவர்கள் நோன்புக்கிரங்கிச் சாவித்திரி பிரசன்னமாயினுள். அவளை அரசனும் அரசியும் நெஞ்சம் நெக்கு நெக்குருக வணங்கித் துதித்தார்கள். அப்பொழுது சாவித்திரி "அன்பர்களே! உங்கள் தவத்திற்கு மகிழ்ந்தேன். நீங்கள் விரும்பியதைக் கேண்மின். தருகின்றேன்'' என்றனள். அவர்கள் இருவரும், "தாயே! அருட்செல்வி! எமக்கு மகப்பேறு பாலித்தருள்க,'' என்று முறையிட்டு வேண்டுதலும் சாவித்திரி, "நீங்கள் ஆண் மகவை இப்போது பெறமாட்டீர்கள்; ஒரு பெண் மகவே பிறக்கும்; அவளால் எல்லாச் சீரும் சிறப்பும் உங்களுக்கு உண்டாகும்,'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினுள்.

---

சரண் – அடைக்கலம். மந்திரம் – நினைப்பவரைக் காப்பது. ஆண் மகவு – ஆண்பிள்ளை.

சிலநாட் கழிந்தன. சாவித்திரியம்மையின் கருணையினால் மாளவிதேவியின் மணிவயிற்றிலே மகப்பேற்றுக்குரிய குறிகள் காணப்பட்டன. அது கண்ட அரசன் உவகை கொண்டான். குடிமக்கள் கேள்வியுற்று மகிழ்ந்தார்கள். பத்துத் திங்களும் முற்றி அரசி ஒரு பெண்மகவைப் பயந்தாள். மாவொன்று நீள மலடிருந்து பூவாத காலத்துப் பூத்து ஒரு நறுங்கனியை ஈன்றவாறு மாளவிதேவி வயது சென்ற காலத்திற் பெற்ற பெண் மகவை அரசன் கண்டு, கண்ணுங் கருத்துங் களி கூர்ந்தான்.

அந்தணர்க்கும் ஆதுலர்க்கும் கனகமாரி சொரிந்தான். சிறைக்களத்திலிருந்த கள்வர், கொலைஞர் முதலிய குற்றவாளிகளை விடுதலை செய்தான். தனக்கு இறுக்கும் இறைகளைப் பன்னீராண்டுக்குக் குடிமக்கள் அநுபவிக்கும்படி பறை சாற்றி அறிவித்தான். அரசன் எய்திய பெரு மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சாவித்திரியின் அருளாற் பிறந்தமையால் அக் குழந்தைக்கு அப் பெயரையே யிட்டு வழங்கினான். குழந்தையும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்துவந்தது. ஐவகைத் தாயரும் குழந்தையை அன்பு கெழுமப் பாராட்டிச் சீராட்டினர். குழந்தையைப் பொற்றொட்டிலில் ஏற்றித் தாயானவள் அருகு நின்று தாலாட்டி வளர்த்துவந்தாள்.

ஆராரோ ஆரிவரோ! ஆராரோ ஆரிவரோ!!
சீரார் பசுங்கிளியே செல்வமே கண்வளராய்

---

மணிவயிறு – அழகிய வயிறு. நறுங்கனி – இனிய கனி. ஆதுலர் – வறியவர். சிறைக்களம் - மறியற்சாலை. கண்வளர்தல் – நித்திரை செய்தல்.

தேனே கரும்பே தெவிட்டாத தெள்ளமுதே
மானே குயிலே மடமயிலே கண்வளராய்

பிள்ளையில்லாப் பாவியென்று பேசுமொழி மாற்றவந்த
தெள்ளமுதே யெங்கள் திரவியமே கண்வளராய்

புத்திரனைப் போலப் புவியாள வேபிறந்த
சித்திரப்பொன் னோவியமே செல்வமே கண்வளராய்

மாணிக்க மேநன் மரகதமே மாற்றுயர்ந்த
ஆணிப்பொன் மேனிதரு மாரணங்கே கண்வளராய்

பெண்ணே! யுறங்காயெம் பெண்மணியே! கண்ணுறங்காய்
கண்ணே! யுறங்காயெங் கண்மணியே! கண்ணுறங்காய்

துன்ப முறங்கவெங்கள் சோகமெலாங் கண்ணுறங்க
இன்ப மெழும்பவரு மெம்முயிரே கண்ணுறங்காய்

பாலாற் குறையோடும் பஞ்சணையாற் பஞ்சமுண்டோ
மாலா யழாதெமது மாமணியே கண்ணுறங்காய்

தந்தை வருந்தாமற் றையலர் வாடாமல்
எந்தம் மனங்களிக்க வின்பமே கண்வளராய்!

*பிள்ளை, தவழ்ந்து, இருந்து, நடக்கும் பருவமடைந்து, குறுகுறு நடந்து சிறுகை நீட்டி விளையாடித் தன் மழலைச் சொற்களால் பெற்றோரைக் களிப்பித்தது. பெற்றோரும் அதனை மார்பிலும் தோளிலும் அணைத்துக் கொஞ்சிக் குலாவி வளர்த்து வந்தார்கள். இங்ஙனம் நிகழுநாள் மகவுக்கு ஐந்து அகவை வந்துற்றது.*

---

*புவி - பூமி. அணங்கு - தெய்வப்பெண். சோகம்- துன்பம். மழலை - நிரம்பாத பேச்சு. அகவை - வயது.*

சா - 2

# 3. கல்வி பயிலுதல்

சாவித்திரிக்கு ஐந்தகவை வந்துற்றது கண்டு, அரசன் சிந்திப்பான் : 'ஐயாண் டதனில் மையேடு கைபிடி,' என்ற பெரியோர் வாக்கின் படி சாவித்திரிக்குக் கல்வி கற்பித்தல் வேண்டும். ஆண் பெண் என்னும் இரு பாலார்க்கும் கல்வியே கண் ; கல்வியே செல்வம் ; குஞ்சியழகுங் கொடுந் தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல ; கல்வியழகே யழகு. கல்வி கற்பதனால் அறியாமை நீங்கும். அது நீங்கவே உலக நிலையாமை விளங் கும். அது விளங்கவே தத்துவ நெறியிற் செல்ல லாகும். அங்ஙனஞ் சென்றார், இப்பாலுலகத்தில் இசை நிறுவி அப்பால் உயர்ந்த உலகத்தையும் அடைவர். மனைக்கு விளக்கு மனைவி. மனைவிக்கு விளக்கு மக்கள். மக்களுக்கு விளக்கு கல்வி. சிலர் பெண்பாலார்க்குக் கல்வி வேண்டாமென்று வாதாடுவர். அது மடமை. உடம்புக்கு உணவு எங்ஙனம் இன்றியமையாததோ அங்ஙனமே உயி ருக்குக் கல்வி இன்றியமையாதது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் உயிருண்டு. ஆகவே, அவர் இருவர்க்கும் கல்வி இன்றியமையாததாகின்றது. அதில் ஆண்பாலார் படிக்கப் பெண்பாலார் படியாதிருத்தற்கு நியாயம் ஒன்றுமில்லை. அன்றியும்

---

குஞ்சி - ஆண் மக்களின் தலைமயிர். தானை-ஆடை. கோடு-கரை. தத்துவநெறி - உண்மை வழி. இசை - புகழ். நிறுவி - நிலைநாட்டி. மடமை - அறிவின்மை.

ஆன்மாக்கள் பிறவியையடைந்தது, கடவுளை வணங்கி முத்தி யின்பம் பெறும்பொருட்டேயாம். அதற்குக் கல்வி ஒருதலையான் வேண்டப்படு மன்றோ! பெண்கள் கல்வி கற்காவிட்டால் எங்ஙனம் கடவுளை யறிந்து முத்திகூடுவார்கள். பெண்கள் கற்று உத்தியோகம் பெறப்போகிறார் களா என்று சிலர் கேட்பர். பெண்களுக்கு இல் லறத்தை நடத்துவதே மிகப்பெரிய உத்தியோகம். ஆண்பாலாரைப் போல உத்தியோகம் பார்ப்ப தற்கு அவர்கள் பெண்மை தடுக்கும். அமைச்சன் இல்லாத அரசன் இராச்சியபரிபாலனஞ் செய் தல் எங்ஙனம் கூடாதோ அங்ஙனமே கல்வியில் லாத பெண் இல்லறத்தை நடத்துதல் கூடாது. கல்வியில்லாத பெண் கணவற்கு எங்ஙனம் துணையாவாள்? மைந்தரை எங்ஙனம் நல்வழியிற் பயிற்றுவாள்? இன்னும் கல்விக்குத் தெய்வம் சரசுவதி; அவள் பெண்பாலல்லளோ? அங்ஙன மிருக்கப் பெண்களைப் படிப்பியாது விடுதல் புத்தி யன்று. ஔவை, உறுவை, உப்பை, பொன்முடி, காரைக்காலம்மையார் முதலாயினோர் கல்விக் கரைகண்ட பெண்மணிகளல்லரோ? அன்றியும், எனக்குப் பின் எனது மகளே இராச்சியத்துக் குரியவள். இராசதந்திரங்களை யறிதற்குக் கல்வி அவளுக்குக் கட்டாயம் வேண்டுமன்றோ? ஆகவே, நமது குமாரத்திக்குக் கல்வி பயிற்றுவித்தல் முக்கியமானது.

---

முத்தியின்பம் - வீட்டின்பம். ஒருதலை - நிச்சயம். உத்தியோகம் - முயற்சி. இராச்சிய பரிபாலனம் — நாட்டினைக் காத்தல்.

உடனே அரசன் தனது நாட்டிற்கு அணித்தாக இருந்த காட்டிலே சற்குணசீலராய்த் தவநெறி மேற்கொண்டிருந்த முனிவர் ஒருவரிடத்தே தனது புத்திரியை அழைத்துச் சென்று அவளுக்குக் கல்வி கற்பிக்குமாறு ஒப்படைத்தான். வயது முதிர்ந்து நரையாளரான அம் முனிவருக்கு இவளைக் காண்பதும் பேசுவதும் மிகவும் இன்பமாயிருந்தன. கதிரவனொளிகூட நுழையவியலாது அடர்ந்த அக் காட்டிலே சாவித்திரி செல்வது ஓர் இளஞ் சூரியன் உதித்தாற்போல விருந்தது. முனிவர் அவளுக்கு வேண்டிய எல்லாக் கலைகளையும் கற்பித்தார். பின்பு சமய விளக்கத்திற்குரிய தீக்கை முதலிய சடங்குகளைச் செய்து ஞான நூல்களையுங் கற்பித்தார்.

எல்லா வுலகங்களுக்கும் கடவுள் ஒருவரேயுண்டு. அவருடைய அருளினாலே உலகமும் உயிர்களும் இயங்குகின்றன. கடவுள் எங்கும் உள்ளவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்; அநாதியே பாசங்களினின்றும் நீங்கியவர்; அவர் பரம கருணாநிதி. அவருக்குத் தமக்கென உருவமில்லை; தமக்கெனக் குணமில்லை; தமக்கெனத் தொழிலில்லை; ஆன்மாக்கள் பொருட்டே உருவம் குணம் தொழில்களைக் கொண்டு நிற்பார். ஆன்மாக்களை அநாதியே பந்தித்த பாசம் நீங்கும்படி

---

சற்குணம் - மேலான குணம். சீலர் - ஒழுக்கமுடையவர். கதிரவன் - சூரியன். தீக்கை - சிவஞானமுண்டாவதற்குரிய சடங்கு. ஞானநூல் - மெய்யறிவு நூல்.

பிறவியிலே விடுத்துப் படைத்தும் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளியும் வருவார்.

ஆன்மாக்கள் அநாதியேயுள்ளன ; அளவிறந்தன ; அநாதியே பாசத்தால் மறைக்கப்பட்டன ; அப்பாசத்தினுலே பிறவியை யடைந்தன. பிறத்தலும் இறத்தலும் பெருந் துன்பம். பாசமறைப்பு நீங்கினுற் பிறவி நீங்கும். பாசமறைப்பு ஞானத்தினுலே நீங்கும். ஞானம் குருவருளால் உண்டாகும். கடவுளே குருவாக வருவார். அவர் ஆன்மாக்களுடைய பக்குவங் கண்டு வந்து ஞானத்தைத் தருவார். நல்வினைகள் செய்து வழிபடிற் பக்குவம் உண்டாகும். ஆணவம் கன்மம் மாயையெனப் பாசம் மூவகைப்படும். ஆணவம் ஆன்மாவின் அறிவை மறைத்தது. மாயை ஆன்மாக்களுக்குத் தேகத்தையும் புவனத்தையும் கொடுக்கின்றது. கன்மம் போகத்தைக் கொடுக்கின்றது. அது நல்வினை தீவினையென இருவகைப்படும். நல்வினை செய்தார் இன்பத்தை அநுபவிப்பார். தீவினை செய்தார் துன்பத்தை அநுபவிப்பார். இத்தேகம் ஆன்மாவன்று ; தேகத்தில் வியாபித்திருக்கும் அறிவுடைப் பொருளே ஆன்மா. அதனை மேனெறிக்கணுய்த்தல் வீடுபேற்றிற்கு வழியாகும்; இவ் வகையான அரிய பெரிய உண்மைப் பொருள்களை யெல்லாம் முனிவர் சாவித்திரிக்கு அறி

---

பாசம் - அறியாமை. பாசமறைப்பு - அறியாமையாகிய மறைப்பு. புவனம் - உலகம்.

வுறுத்தினர். சாவித்திரி எல்லாவற்றையும் மிகக் கூர்ந்து நோக்கி விளங்கிக்கொண்டாள்.

அவ்வளவிற் சாவித்திரிக்கு மங்கைப் பருவமும் வந்துற்றது. அதுகண்டு முனிவர் அவளுக்கு இல்லறவியலை நன்கு போதித்தார். உலகத்திலே இல்லறம் துறவறமென இரண்டு நெறிகள் உண்டு. அவற்றுள் இல்லறம் இயற்கையானது; இலேசாக அநுட்டிக்கத் தக்கது. 'இல்லறமல்லது நல்லறமன்று' என்பர் மேலோர். இல்லறத்துக்கு இன்றியமையாதவள் கற்புடைய பெண். பெண்ணுக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு முதலிய குணங்களுடன் கற்பென்னும் சிறந்த குணமும் இருத்தல் வேண்டும். கற்பே பெண்களுக்குச் சிறந்த அணிகலன். கற்புடைய பெண்கள் கணவனையே தெய்வமென்று கருதி வழிபடுவார்கள். அப்பெண்களை மக்களேயன்றித் தேவர்களும் முனிவர்களும் வணங்குவார்கள். அவர்கள் பெய்யெனப் பெய்யும் மழை.

'கற்புக் கடம்பூண்ட வித்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம்யாங் கண்டிலமால்'

என்பர் பெரியோர். கற்புடைய பெண்டிர் இருந்த நாட்டில் வானம் பொய்யாது; வளம் பிழையாது; நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது; கற்புடையோர்க்கு அரியதொன்றில்லை.

சாவித்திரியே! ஒரு பெண் கைக்கொள்ள வேண்டிய வொழுக்கங்கள் பலவுள. அவள்

---

அணிகலன்-ஆபரணம். கற்புக்கடன் - கற்பொழுக்கம்; என்றது, தன் கணவனைத் தெய்வமாகக் கொள்ளும் விரதம்.

சூரிய னுதிக்குமுன் நித்திரை விட்டெழுதல் வேண்டும். எழுந்து வீடுவாசல் பெருக்கி அலங் கரிக்க வேண்டும். இல்லுறை தெய்வத்திற்கும் கணவற்கும் வழிபாடு செய்தல் வேண்டும். அறு சுவையுடைய கறியமுதுகளைச் சமைத்து நாயக னுக்கும், விருந்தினர்க்கும், அதிதிகட்கும் அருத்தித் தானுண்ணுதல் வேண்டும். நாயகனுடைய வரு வாய்க்குத் தக்க செலவு செய்தல் வேண்டும். நாயகனுடைய வாழ்வினுந் தாழ்வினுந் தான் கலந்துகொள்ளுதல் வேண்டும். நாயகன் நோய் முதலிய துன்பமடைந்தால் அவனை நன்கு பரிபா லிக்க வேண்டும். 'கல்லென்றாலும் கணவன், புல்லென்றாலும் புருடன்' என்பர் முதியோ ராதலின், கணவனை எவ்வாற்றானும் இகழ்தல் கூடாது. நாயகனுடைய அனுமதியின்றி விழாப் பார்த்தல், நதியாடுதல், பிரயாணஞ் செய்தல் முதலிய தொழில்கள் செய்தல் கூடாது.

நாயகனுடைய பெயரைச் சொல்லி யழைத் தல் கூடாது. அங்ஙனஞ் செய்யின் அவன் ஆயுள் குறையும் என்பர் சான்றோர். நாயகனுடைய வருவாயைக்கொண்டு தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் முதலியோரை யோம்பு தல் வேண்டும். நாயகன் விரும்பியதைக் குறிப்பா லுணர்ந்து செய்தல் வேண்டும். மஞ்சள், குங்குமம், மலர் முதலிய மங்கலப் பொருள்களை யணிதல் வேண்டும். அதனால் நாயகனுக்கு ஆயுள் சிறந்து மங்கல முண்டாகும்.

சாவித்திரியே! இன்னுங் கேள்: பெண்கள் உரலிலும், அம்மியிலும், வாயிற்படியிலும்,

முறத்திலும், துடைப்பத்திலும் இருத்தல் கூடாது. இருப்பின் செல்வம் நீங்கும்; வறுமை கூடும். கணவனுடைய தாய் தந்தையரையும் சுற்றத்தினரையும் அவனைப்போலவே மதித்து நேசித்துப் பேணுதல் வேண்டும். கணவனுடைய தாய் தந்தையராகிய மாமன் மாமியரை நிந்தித்தலும் அவர்கள் கட்டளையை மீறுதலும் பெரும் பாவங்களை விளைக்கும். இன்பமான வாழ்க்கை நடத்துதற்கு ஓர் ஆடவனைப் பெற்று வளர்த்துத் தந்தவர்கள் அவர்களன்றோ? ஆதலால் அவர்களை மனமொருமித்து அன்போடு வழிபடுதல் வேண்டும்.

நல்லொழுக்கம் இல்லாத பெண்களுடன் சினேகிக்கக்கூடாது. கற்பு நெறியும் நல்லொழுக்கமுமுடைய பெண்கள் இருக்குமிடம் புண்ணிய பூமி. அவர்கள் மிதித்த இடம் பரிசுத்த தலம். அவர்களும் தெய்வவமிசமுள்ளவர்கள். இங்ஙனமொழுகுவதன்றி நாயகனோடு எதிர்த்து வார்த்தையாடும் பெண்கள் இயமனோடு ஒப்பர். நேரத்துக்கு உண்டியுதவாதவர் பிணியோடு ஒப்பர். உண்டி சமைத்துவைத்தும் உதவ விரும்பாதவர் பேயோடு ஒப்பர். இந்த முத்திறத்தவரும் கொண்டாரைக் கொல்லும் படைகள். சாவித்திரியே! இவைகளை நீ நன்கறிந்து கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். இங்ஙனம் ஒ்ழுகினால் மூவுலகத்திலும் உனக்கு அரிய பொருள் ஒன்றும் இல்லை என்று கற்பின் பெருமையையும் இல்லறத்தின் இலக்கணங்களையும் முனிவர் எடுத்துரைத்தார். இவைகளையன்றி முனிவரால்மட்டு மறியத்தக்க

---

உண்டி - உணவு. படை - ஆயுதம். கடைப்பிடித்து- எப்போதும் நெகிழவிடாது கைக்கொண்டு.

அநேக ஞான இரகசியங்களையும் வேதாந்த சித்தாந்த சமரச சுவானுபவங்களையும் ஐயந்திரிபறப் போதித்தார். சாவித்திரி அவைகளைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்துகொண்டாள்.

இவ்வாறு வயது வளர வளர அறிவும் வளர்ந்து தேர்ச்சி பெற்றாள். அவள் மனம் கடவுள் வழிபாட்டிலே அழுந்தியிருந்தது. கடவுளுடைய திருப்பெயர்களை இடைவிடாது உச்சரித்துக் கொண்டிருப்பாள். 'உலகத்திலே உண்மையாக நோக்குமிடத்து என்றும் எமக்குத் துணையாயிருப்பவர் கடவுளே. எம்மிலும் எமக்கு இனியவரும் அவரே. நாம் உயிரோடு இருக்கும்பொழுதும் அவரே துணை. இறந்த பின்பும் அவரே துணை. கண்ணை இமை காப்பதுபோல எம்மை என்றுங் காப்பவர் அவரே. தந்தை தாய் முதலியோர் இவ்வுலகத்திற்றான் துணையாவார். அதுவுஞ் சிறிது காலத்துக்கே துணையாவார். அக்காலத்திலுந் தம்மாலியன்ற துணையே செய்வர். ஆதலால் ஊராருந் துணையல்லர்; உற்றாருந் துணையல்லர்; பெற்றாருந் துணையல்லர்; பிள்ளைகளுந் துணையல்லர்; செல்வமுந் துணையன்று; உலகத்திலே எவையுந் துணையல்ல; கடவுளுடைய திருவடிகளே துணை. அவைகளே நம்பற்பாலன. அவைகளே பற்றற்பாலன. அவைகளே தியானிக்கற்பாலன', என்ற உண்மையறிவு அவளிடத்திற் றலைப்படலாயிற்று.

---

ஞானம் – கடவுளை யறியும் அறிவு. ஐயம் – சந்தேகம். திரிபு – ஒன்றை வேறாக விளக்கும் பொய்யறிவு. தியானம் – மனத்தை வேறு வழியிலே விடாமற் கடவுளிலே நிறுத்துதல்.

# 4. முனிவர் உபதேசம்

சாவித்திரி அழகிலும், குணத்திலும், அறிவிலும், கடவுட் பத்தியிலும், நல்லொழுக்கத்திலும் நாடோறுஞ் சிறந்து விளங்கினுள். அவள் புகழ் திக்கெங்கும் பரவியது. மற்றைத் தேசங்களிலுள்ள அரசிளங் குமரர் அவளுடைய பிரதாபங்களைக் கேட்டு அவளை மணம் முடிக்க வேண்டுமென்று முயன்ருர்கள். சாவித்திரியோ தன்னைப் போன்ற கல்வியறிவும் நற்குணமுமுடைய ஆடவனையே விவாகஞ் செய்ய வேண்டுமென்று எண்ணியிருந்தாள். தானறிந்த அரசிளங் குமரரிற் கல்வி முதலியவற்ருற் றனக்கு இணையான ஆடவன் அகப்படாமையினுல் அவளுக்கு வதுவையில்லாது நெடுநாட் கழிவதாயிற்று. இது தந்தை தாயர்க்குப் பெருங் கவலையை யுண்டாக்கியது. அவர்கள், 'பூப்படைந்த பெண்பிள்ளையை வதுவை செய்யாது மனையில் வைத்திருத்தல் கூடாது. இதற்கு யாது செய்வேம்? சோற்றைக் கொடுத்த தெய்வமே சுவர்க்கத்தையுங் கொடுத்தல் வேண்டும். அரும்பெறற் புதல்வியை யருளித் தந்த தெய்வமே அவளுக்கு ஏற்ற மணவாளனையும் அளிக்கும்; அத் தெய்வத்தையே நோக்கி வரங்கிடப்பேம்' என்று துணிந்து வரங்கிடப்பாராயினர்.

தந்தை தாயருடைய நம்பிக்கையும், அன்பும் வீணுகவில்லை. கடவுள் அவர்கள் மனக்கவலையை

---

பிரதாபம் — கல்வியாலும் ஒழுக்கத்தாலு முண்டாகும் புகழ். வதுவை — திருமணம். பூப்பு — பருவம். சுவர்க்கம் — துறக்கம். மணவாளன் - தலைவன்.

மாற்றத் திருவுளங் கொண்டார். அதற்கேற்ற காலமுங் கிட்டியது. ஒருநாட் சாவித்திரி வழக்கம் போலக் கல்வி கற்கும்படி முனிவருடைய ஆச்சிர மத்திற்குச் சென்ருள். அப்பொழுது இருடி குமாரர் பலர் அவ்வழியே சென்ருர்கள். அவர்களுள் மலர்ந்த முகமும் குளிர்ந்த நோக்கமும் தெளிந்த வதனமும் சிறந்த அழகுமுடைய ஓர் இளைஞன் செல்லக் கண்டாள்.

உடனே அவ் விளைஞனுடைய வடிவம் அவள் மனத்திற் பதிந்துவிட்டது. ஒருகாலும் ஆடவரை ஏறெடுத்துப் பாராத அவள் கண்கள், அவனையே இடைவிடாது நோக்கின; அவன் வடிவழகினைப் பருகின. முன்ஞெருபொழுதும் இல்லாததோர் ஆர்வமும், எழுச்சியும் அவள் நெஞ்சிலே தோன் றின. அவளுக்குத் தன்னை யறியாமல் உடம்பு புளகித்தது. ஆனந்தத்தாற் கண்களில் நீர் ததும் பிற்று. 'ஐயோ! இஃது என்ன வேறுபாடு! இவரைக் கண்டவுடன் என்னுள்ளம் உருகுவா னேன்? இவருக்கும் எனக்கும் முற்பிறவித் தொடர்பு உண்டுபோலும்! என் கொழுநராதற்கு உரியர் இவரே போலும்! எல்லாம் அறியுங் கடவுளே! இதுவும் உன் மாயமோ? விதிவசத் தால் எனக்குக் கொழுநராதற்கு உரியவர் இவரே யாயின், இவரை மணந்து கொள்ளுமாறு திரு வருள் செய்க. ஈசனே! எல்லாமுன் அடிமையே; எல்லாமுன் உடைமையே; எல்லா முன்னுடைய செயலே; நான் ஒன்றுமறியேன். உன் செஞ்

திருவுள்ளம் - மனவிருப்பம். ஆச்சிரமம் - தவப் பள்ளி. ஆர்வம் - ஆசை. கொழுநர் - கணவன்.

சரணமே தஞ்சம்', என்று இங்ஙனம் எண்ணிக் கொண்டு முனிவர் ஆச்சிரமத்தை யெய்தினுள்.

முனிவர் வழக்கம்போல அவளுக்கு ஞானுபதேசஞ் செய்தார். அது சாவித்திரியின் மனத்திலே பதியவில்லை. முனிவர் கூறுவதைக் காது கொடுத்துக் கேட்பதுபோல வெளிக்குக் காட்டினுளாயினும் அவள் கருத்து அதிற் செல்லவில்லை. அதை முனிவர் உடனே அறிந்தார். அவர் அவளை யன்போடு பார்த்து, "மகளே! நீ சிறிது வேறுபாடடைந்திருக்கின்ருயென அறிகின்றேன். அதற்குக் காரணம் யாது? உடம்பில் ஏதாவது நோயுண்டா? மனத்தில் ஏதாவது சஞ்சலமுண்டா? உற்றதை ஒளியாது கூறு. நான் அறிவும், அநுபவ முதிர்ச்சியு முடையேன். உனது கவலையைப் பரிகரிக்க வல்லேன்" என்று கேட்டார்.

சாவித்திரி உடனே அவரை வணங்கி யெழுந்து நின்று, "குருவே! என் மனக் கவலையைக் கேட்டருள்க", என்று தான் ஆச்சிரமத்தை நோக்கி வந்ததும், வழியில் முனிவர் புதல்வனைக் கண்டதும், அவன்மேற் தன்னை யறியாமலே யன்பு சென்று கலந்துகொண்டதும் ஆகிய நிகழ்ச்சிகளை யொளியாது கூறி, "அவ்வாண்டகை யாவன்? என்றறியும் விருப்பமுடையேன்; அதனை அருள் செய்க", என்று மிகப் பணிந்து வேண்டினுள். முனிவர் குறுநகைகொண்டு பின்வருமாறு கூறுவார்:

"என்மகளே! கேட்பாயாக. நீ கண்ட இளைஞன் பெயர் சத்தியவான். இவ் வனத்திலே இப்

---

ஞானுபதேசம்—ஞான+உபதேசம்; நல்லறிவுரைகள்.

பொழுது துறவு பூண்டிருக்கின்ற தியுமற்சேனர் என்பவருக்கு அவன் ஏகபுத்திரன். தியுமற்சேனர் இளமை முதல் எப்பொழுதும் சந்நியாசியாக இருக்கவில்லை. அவர் ஒருகாலம் சாலுவதேசத் துக்கு அரசனு யிருந்து செங்கோல் செலுத்தி யவர். சிறந்த நீதிவான்; பரந்த கீர்த்திமான். நரைதிரை முதிர்ந்து கண்ணொளி மழுங்கிய முது மைப் பருவத்திலே தீவினைப் பயன் சேர்தலினுற் பகைவர் எதிர்த்துப் போர்செய்து நாடு நகரங் களைப் பறித்துக்கொண்டார்கள். தியுமற்சேனர் மீட்டும் போர் புரியவில்லை. அப்பொழுது சத்திய வான் சிறு குழந்தையாக விருந்தான். தியுமற் சேனருக்கு அரசாட்சியிலே வெறுப்புத் தோன்றி யது, 'மனத் துயரத்தோடு கிரீடம் பூண்டு அரசு செய்வதிலும் மன நிறைவோடு துறவு பூண்டு வீட்டுலகத்தை யாள வழிதேடுதல் நன்று. முன்னே உலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் அரசாண்ட முடிமன்னர் எங்கே? அவர் பின்னே இவ்வுல கஞ் சென்றுவிட்டதா? என்னுடன் இவ்வுலகம் கூடிவருமா! அல்லது என்னை இப்பொழுது வென்ற பகைவனுடன் இது செல்லுமா? சீ! சீ! இந் நாடாட்சி வேண்டாம். வீடாட்சியே வேண் டும்' என்று மனத்தைத் தேற்றிக்கொண்டார்.

"பின்பு மனைவியுடனும் குழந்தை சத்தியவா னுடனும் இக் கானகம் புகுந்து துறவொழுக்கம் மேற்கொண்டிருக்கின்றார். சத்தியவான் இங்கே தான் வளர்ந்தான். முனிவரிடத்திலே கல்வி

---

ஏகபுத்திரன் - ஒரேயொரு மகன். கானகம் - காடு.

பயின்ருன். காட்டிலே வளர்ந்து காவியுடை தரித்திருந்தாலும் அரசவிலாசம் அவனிலே திகழ்கின்றது. அவன் அரசகுமாரன் அல்லனே? நெல்லு விதைத்தாற் புல்லு முளைக்குமா? சத்தியவான் சிறந்த பராக்கிரமசாலி; தருமத்திற்கு வேலி; கல்வியிற் கடல்; தேவபத்தியிற் சிறந்தவன்; தாய் தந்தையரை முன்னறி தெய்வமென்று போற்றி வழிபடுபவன்; நம்பினவருக்கு மோசஞ் செய்யாதவன்.

"சாவித்திரியே! இன்னுங் கேள். சத்தியவான் பிறர் மனைவியரைப் பெற்ற தாய் போலப் பேணுவான். பிறர் பொருளை எட்டிபோல வெறுப்பான். பிறருடைய வசைகளைச் சொல்லிப் புறங் கூருன். பிறர் கல்விச் செல்வங்களைக் கண்டு பொருமையடையான். பிறருக்கு வந்த துயரைத் தனக்கு வந்ததாகக் கொண்டு, அவர்களுக்குத் தன்னுலியன்ற உதவி புரிவான். பிறவுயிர்களிற் கிருபையுடைய வள்ளல். அடைந்தோரைப் பாதுகாக்கும் அண்ணல். பால் புளிப்பினும், பகலிருளினும், குணக்கெழு பரிதி குடக்கெழுந்திடினும் சொன்னசொற் றவருன். இன்சொல்லும் தாழ்ந்த நடையு முடையன். எக்காலமும் உண்மை பேசுவதினுல் அவனுக்குச் சத்தியவான் என்று பெயர் வைத்தார்கள்.

"சாவித்திரியே! அவனுடைய தந்தை அரசனுயிருக்க அவன் இளவரசனுக விருந்தாலன்றே அவன் பெருமை விளங்கும்! இப்பொழுது

எட்டி – நச்சுமரம். கிருபை – கருணை. குணக்கு – கிழக்கு. குடக்கு – மேற்கு.

ஊமைக் குடத்துட் சுடர்போல், ஒளி மழுங்கி யிருக்கின்றன். சந்திரனிலே கறையுண்டு; சூரியனிலே மறுவுண்டு; சத்தியவானிலே குறையில்லை'', என்று முனிவர் சத்தியவான் வரலாறு முழுவதுங் கூறக் கேட்ட சாவித்திரி கழிபேரின்பம் எய்துவாளாயினள். பின்பு, சாவித்திரி முனிவருக்கு வணக்கஞ் செய்து விடை பெற்றுக்கொண்டு இல்லந் திரும்பினள்.

கடிகாவிற் செழுமலர்கள் நறுமணம் வீசின. மாஞ்சோலையிற் பூங்குயில்கள் தீங்குரலால் இசை பாடின. சந்தனப் பொருப்பிலே தமிழுடன் பிறந்த மந்தமாருதம் வந்து வந்து உலாவிற்று. வெள்ளிடையிற் புள்ளி மஞ்ஞை துள்ளியாடின. கஞ்ச வாவியிற் செங்கால் அன்னம் துணையொடு கொஞ்சி விளையாடின. சாவித்திரி இவைகளை ஆர்வத்துடன் நோக்கினள். முன்னொருபொழுதும் இல்லாத வுள்ளக்கிளர்ச்சி அப்போது அவளுக்குண்டாயிற்று. வழிகள் எல்லாம் மங்களகரமாயிருந்தன. வெய்யிலும் மந்தாரமாகவே யிருந்தது.

---

கழிபேரின்பம் – மிகப் பெரிய மகிழ்ச்சி. கா – சோலை. சந்தனப்பொருப்பு – பொதியமலை. மந்தமாருதம் – தென்றற் காற்று. மஞ்ஞை – மயில். கஞ்சவாவி – தாமரைத் தடாகம். துணை – துணையாகிய பெடை. மந்தாரம்–மென்மை (உலகவழக்குச்சொல்.)

## 5. சத்தியவானைக் காதலித்தல்

சாவித்திரி பெருமகிழ்ச்சியோடு வீட்டிற்குச் சென்றாள். சென்றவள் தன்னன்னையைக் குறுகி வணங்கி, நடந்த நிகழ்ச்சிகளை யொன்று மொளியாமல் அவளுக்குக் கூறினாள். கூறக் கேட்ட தாய் மகிழ்ச்சி பொங்க நாயகனிடஞ் சென்று அதனை யறிவித்தாள். நாயகனுங் கேட்டுப் பேருவகை யெய்தினான். எய்தினனாயினும் விவேகியாதலால் 'இதனைத் தீர விசாரித்தே முடிவுசெய்தல் வேண்டும்' என்று சிந்தித்தான்.

அவன் தேவியை நோக்கிப், "பெண்ணே! திருமணம் என்பது தீர்க்காலோசனையுடன் செய்ய வேண்டியதொன்று. 'எண்ணித் துணிக கருமம்' என்பதனால் நாம் இதனைப் பலமுகமாக விசாரித்தல் நன்று. இதனைப்பற்றி யாருடன் உசாவலாம்" என்றான். "ஐயனே! எங்கள் குலகுருவாகிய நாரத முனிவரை அழைப்பித்து அவரோடு சிந்தித்தல் தக்கது" என்று கூறினாள். அரசன் அதற்குடன்பட்டு முனிவருக்கு ஆள் அனுப்பினான். உடனே நாரதர் ஆங்கு எழுந்தருளினார். அரசனும் அரசியும் அவரை எதிர்கொண்டு வணங்கித் தவிசி லிருத்தி யுபசரித்த பின்பு அவரை நோக்கிக் கூறுவார்: "எங்கள் பிள்ளைக் கலிதீர்த்த பெருமானே! தேவரீருடைய திருவருளாற் பிறந்த அருமைப் புதல்வி யிவள்" என்று சாவித்திரியை யழைத்துக் காட்டி வணங்குவித்தார்கள். முனிவர்

---

பேருவகை—அளவற்ற மகிழ்ச்சி. பலமுகம்—பலவாறு. உசாவுதல்—கலந்தாலோசித்தல். தவிசு—இருக்கை.

சாவித்திரியின் சென்னியிற் கையை வைத்து, "குழந்தாய்! நீ சுமங்கலியாய் நீடூழி வாழ்க; உன் கற்பொழுக்கம் சிறப்புற்றோங்குக" என்று வாழ்த்தினார்.

அப்பாற் சாவித்திரி சத்தியவானைக் கண்டதும் அவனை வதுவை செய்ய விழைந்துகொண்டதும் ஆகிய நிகழ்ச்சிகளை அரசன் முனிவருக் கெடுத் தியம்பி முனிவர் திருவுள்ளக் கருத்தை வேண்டி நின்றான். முனிவர் சாவித்திரியைப் பக்கத்தி லழைத்து நிகழ்ந்த சம்பவங்களைக் கேட்டார். அவள் யாதும் ஒளியாது கூறினாள். அதுகேட்ட முனிவருக்கு முகம் மாறியது; துக்கமுண்டானது. மூக்கிலே சுட்டுவிரலை வைத்துச் சிறிது நேரஞ் சிந் தித்தார். பின்பு பெருமூச்சுவிட்டு, "மகளே! நீ சத்தியவானை விரும்பாதே; வேறு யாரையாவது கொழுநனாகத் தெரிந்துகொள்", என்று கூறினார்.

முனிவர் அதனைக் கூறி முடிக்கமுன் சாவித்திரி நெஞ்ச நெக்குருகி, "சுவாமி! நான் ஏன் வேறு ஒருவரை விரும்பவேண்டும்? அவரையேன் விலக்கவேண்டும்? என் மனம் அவர்பாற் சென்று விட்டது; இனி அதனை மீட்டுக்கொள்வது அரிது. அவருடைய திருவுருவம் எனது உள்ளமாகிய கண்ணாடியில் நன்றாய்ப் பிரதிவிம்பித்துவிட்டது. என்னுள்ளத்தைப் பிளந்து பார்ப்பின் அவரைக் காண்பீர்கள். அவரையே எனக்கு நாயகனாகத் தெரிந்துகொண்டேன். இனி வேறொருவரைக்

சென்னி — தலை. வதுவை - மணச்சடங்கு. கொழு நன் — கணவன்.

கனவிலும் விரும்பேன். ஓர் உறையில் இரண்டு வாள் புகுமா? ஓர் உள்ளத்தில் இரண்டு நாயகருக்கு இடமுண்டா? எல்லாமுணர்ந்த தேவரீர் இங்ஙனங் கூறலாமா?", என்று தேம்பித் தேம்பி யழுது கூறினாள்.

அப்பொழுது அசுவபதி நாரதரைப் பார்த்து, "சுவாமி! சத்தியவான் கல்வியறிவு கருணை உடல்வனப்பு நல்லொழுக்கம் முதலியன அமைந்தவனா? அவன் தன்மைகள் யாவை?", என்று கேட்டான். நாரதர், "அரசே! சத்தியவான் மிக நல்லவன்; சூரியனைப் போலத் திடமுடையவன்; வியாழ குருவைப் போல ஞானமுடையவன்; பூமி தேவியைப்போலப் பொறையுடையவன்; வஞ்சகம், பொய், அழுக்காறு முதலியன இல்லாதவன்; அரசகுமாரன்", என்று விடைகூறினார்.

அதனைக்கேட்ட அரசன் கூறுவான் :-

"சத்தியவான் அங்ஙனம் நற்குண நற்செய்கை யுடையவனாயின் சாவித்திரி அவனை மணந்து கொள்வதற்கு என்ன தடையுண்டு? அவன் அரசிழந்து காட்டிலே துறவியா யிருக்கிறான் என்பதைப்பற்றி நமக்கு ஒரு சிறிதும் வெறுப்பில்லை. மின்னினும் விரைந்தழிகின்ற செல்வத்தை நாம் பொருளென மதியேம்; சற்குணத்தையே மதிப்போம்; சுவாமிகள் தடை செய்வதன் காரணம் யாது? அதனை யறிய விரும்புகின்றேன்."

அது கேட்ட நாரதமுனிவர் நெடுநேரம் வாளாவிருந்து கூறத் தொடங்கினார்:

---

வனப்பு - அழகு.

"அரசனே! நான் இறந்த காலம் நிகழ் காலங்களை யன்றி எதிர் காலத்தையும் அறியும் ஆற்றலுடையேன். சத்தியவான் நாடிழந்து காட்டி லிருப்பதனால் அவனை மணம் முடித்தல் கூடாதென்று நான் மறுக்கவில்லை. அவனுடைய ஆயுள் இன்னும் பன்னிரண்டு திங்களுக்கே யுள்ளது. அவை கழிய அவன் இறந்துவிடுவான். சாவித்திரி அவனை மணந்தால் ஓராண்டில் மங்கலியம் இழந்து விதவையாவாள். அங்ஙனமாதல் எங்கள் எல்லேமுக்கும் துயரத்தை யுண்டாக்குமன்றே! அதனை யுன்னியே மறுத்தேன்."

இவைகளை யுற்றுக் கேட்ட அரசனும் தேவியும் வியாகுல மடைந்தார்கள்; என்ன சொல்வதென்றறியாது திகைத்தார்கள்; சிறிது நேரம் பேசாதிருந்தார்கள்; பின்பு நெடுமூச்செறிந்தார்கள்; உடம்பு நடுங்கினார்கள். அரசன் ஒருவாறு தேறியெழுந்து மகள் கரத்தைத் தன் கரத்தினாற் பற்றிக் கண்களி லொற்றி மோந்துகொண்டு உரை குளற, நாத் தடுமாறக் கண்ணீ ரொழுக இது கூறுவானாயினன் :— "எனது பிள்ளைக்கலி தீர்க்க வந்த பெண்மணியே! என் கண்ணுள் நின்றிலங்கும் கதிர்மணியே!! என்னன்பே!! ஆருயிரே!! குழந்தாய்!! நான் கூறுவதைக் கேள் :

"நாங்கள் உன்னை நெடுங்காலந் தவமிருந்து பெற்றேம்; பெருமையாக வளர்த்தோம்; மைந்தனைப் போலப் பாராட்டினேம். நீ சத்தியவானை மணந்தால் ஓர் ஆண்டிலே மங்கலியம் இழக்க வேண்டி வருமாமே! நீ விதவையாகித் தாபத நிலை பூண்டிருத்தலை நாங் கண்கொண்டு பார்ப்

திங்கள் – மாதம், தாபதநிலை - விதவைவிரதம்

போமோ? பார்த்தும் உயிரோடிருப்போமோ? ஐயோ! மகளே! அப்பொழுது எங்கள் மனம் என்ன பாடுபடும்! நீயும் நாடோறும் கண்ணீருங் கம்பலையுமாய் நெருப்பிலிட்ட புழுப்போலத் துடி துடித்து வருந்துவாயே! 'மக்கள் இழந்த இடும்பை யினும் மனையாள் இழந்த இடும்பையினும் மிக்க விடும்பை யோவாத விதவை யிடும்பை' என்று ஆன்றோர் கூறுகின்றார்களே.

"நீ கட்டிய கணவனை ஓர் ஆண்டில் இறந்து துன்பமடைதலினும் கடல் நடுவே கிடக்குங் கற் பாறையின் மேலேயிருந்து அல்லும் பகலும் உண வின்றி வருந்துதல் நன்றன்றே! ஆதலாற் கண்ணே இனிச் சத்தியவானை மனத்திற் கொள் ளாதே. நான் சொல்லும் வார்த்தையை எள் ளாதே. முனிவர் வாக்கினைத் தள்ளாதே."

சாவித்திரி தந்தை கூறியவற்றைச் செவியாரக் கேட்டுச் சிறிது நேரம் வாளா இருந்தாள். பின் னர்த் தந்தையை நோக்கி, "என் ஐயனே! நீங்கள் சொல்வது உண்மையே. உங்கள் வாக்குக்கு எதிர் வாக்கு இல்லை. 'தந்தை சொன் மிக்க மந்திர மில்லை', அவரை நான் மணஞ் செய்யாது விடு கின்றேன். ஆனல், அவர் என்னெஞ்சத்தை விட் டகலார். அவரையன்றி வேறொருவரையும் கனவி லும் நினையேன். பூவுலகுக்கு ஒரே சூரியன். அது போல எனக்கும் ஒருவரே நாயகர். அவர் என்னை மணமுடித்தாலுமென்? முடியாவிட்டாலுமென்?

---

எள்ளாதே - இகழாதே.

மாறி மாறி இரண்டுதரம் நினைப்பேனோ? நான் கன்னியா யிருந்தே வாழ்நாளைக் கடவுள் வழி பாட்டிற் கழிப்பேன்'' என்று சொல்ல, அதுகேட்ட அன்னை தந்தையர் திகைத்து நின்றார்கள்.

சாவித்திரியின் மனவுறுதியையும் காத லன்பினையுங் கண்ட நாரதமுனிவர் ஆச்சரிய மடைந்தார். 'ஆகா! இவளன்றோ கற்புக்கரசி; இவளன்றோ பெண்கள் பெருமாட்டி; அருந்ததியும் இவளுக் கொப்பல்லளே', என்று எண்ணி யெண்ணி யுவகை பூத்தார்.

"குழந்தாய்! நீ நீடூழி வாழி. நின் மனத்தின் படி யெல்லாம் இனிது நிறைவேறுக". என்று கூறிச் சாவித்திரியின் தந்தைக்குக் கூறுவார்:

"மேனாள் விதியை யாவரே வென்றார்? அன் றெழுதியதைப் பிரமன் அழித்தெழுதப் போகின் றானோ? ஆவது விதியெனின் அனைத்தும் ஆகும். போவது விதியெனில் அனைத்தும் போகும். தேவ ருக்கும் அது கடத்தலரிது. விதியின் தன்மையை இன்னதென் றறியாது நாம் அழுதாற் பய னென்னை? நொந்தாற் பயனென்னை? ஆவதில்லை. சாவித்திரி சத்தியவானை மணஞ் செய்வாளாக. செய்துகொண்டு கடவுளின் திருவடிகளை நம்பி அவற்றிற் பத்தி செய்வாளாக. பத்தி ஒரு சூரிய காந்தக் கண்ணாடியை யொத்தது. அதனைச் சூரிய னுக்கு முன்பு பிடிக்கின் அதிலே சூரியனிலுள்ள நெருப்பு வெளிப்படுதல் போலப் பத்தியென்னுங்

---

அருந்ததி – வசிட்டன் மனைவி; கற்பிலே மிகச் சிறந்தவள். மேனாள் – முற்பிறவி.

கண்ணாடியைக் கடவுள் திருமுன்னிலையிற் பிடிக்கின் அதிலே கடவுளின் திருவருள் வெளிப்படும். அப்போது கண்ணில் வருவது புருவத்தில் வந்து நீங்குவதுபோலப் பேரிடர்களெல்லாம் தோன்றி யழியும்.

"மார்க்கண்டேயர் கடவுளிடத்துப் பத்தி செய்து இயமனை வெல்லவில்லையா? அதுபோல அவளும் தனது ஆருயிர்க் காதலன் உயிரை மீட்டுக்கொள்ள வியலும்."

அசுவபதி அரசன் இவைகளைக் கேட்டு மனந்தெளிந்து நாரதமுனிவர் சொற்படி செய் யத் துணிந்து, மனைவியும் சாவித்திரியும் மந்திரி மாரும் உடன்செல்லத் தியுமற்சேனர் இருந்த வனத்திற்குச் செல்வாராயினர்.

---

## 6. திருமண நிகழ்ச்சி

தியுமற்சேனர் காட்டிலே ஒரு மராமரத்தின் கீழே தருப்பாசனத்தில் உட்கார்ந்திருந்தார். பக்கத்திலே சத்தியவானும் தருமபத்தினியும் பணிவிடை செய்துகொண்டு நின்றார்கள். அவ ருக்கு அசுவபதி அரசனுடைய வரவு அறிவிக் கப்பட்டது. அவர் அரசனை முறைப்படி வர வேற்று முகமன் பேசி யுபசரித்துத் தீதின்மை யும் நலப்பாடும் விசாரித்தார். பின்னர் அசுவ

---

பேரிடர் — பெருந்துன்பம்.

மராமரம் - கடப்பமரம். பணிவிடை - தொண்டு கள். தீதின்மை - சுகம்.

பதிக்கும் கூட வந்தவர்களுக்கும் தம்மாலியன்ற படி இனிய விருந்திடுவித்தார். எல்லோரும் சுவைமிகுந்த அடிசிலுண்டு, காட்டின் வளங் கண்டு மகிழ்ந்து வைகினர்.

தியுமற்சேனர் சிறிதுநேரங் கழித்து வந்த காரணத்தை வினவினர். அரசன் தான் வந்த நோக்கத்தை அறிவித்தான். சாவித்திரியைப் பொழிலிடத்தே கண்டபொழுது தன் சித்தத்தை அவளிடம் பறிகொடுத்து மீட்கும் வகை தெரியாது வருந்தியும், அதைப்பற்றி யொருவருக்கும் ஒன்றும் பேசாதும், மௌன முற்றிருந்த சத்தியவான் இப்பொழுது சாவித்திரி தன்னை மணஞ் செய்யத் தேடிவந்ததை உணர்ந்து வியப்பும் நயப்பு மடையலாயினன். 'தேடிய மருந்து காலுக்குள் அகப்பட்டது போல இப் பெண்ணரமுது கிடைத்தது என் பாக்கியமே! இனி என் வாழ்வு தழைத்தது,' என்று எண்ணி மகிழ்ந்தான். ஆனந்த மொருபுறமும் ஆச்சரிய மொருபுறமுமாக அவன் உள்ளத்தை அலைத்தன. சாவித்திரியைப் பார்த்துப் பார்த்து அவள் அழகு முழுவதையும் கண்ணே வாயாகப் பருகினன்.

தியுமற்சேனர் அசுவபதி அரசனைப் பார்த்து "நிருபரேறே! உம்மைப்பற்றியும் உமது புண்ணிய புத்திரி சாவித்திரியைப் பற்றியும் கேள்விப்

நலப்பாடு - மங்கலம். அடிசில் - உணவுவகை. காட்டின் வளம் - வனத்தினழகுக் காட்சி. பொழில் - சோலை. நிருபரேறு - அரசருக்குள் ஆண் சிங்கம் போன்றவன். நிருபர் - அரசர். ஏறு - ஆண்சிங்கம்.

பட்டுள்ளேன். அழகிலும் நற்குணத்திலும் மேம்பட்டு விளங்கும் திருவளர் செல்வி சாவித்திரியை என் மகன் மணஞ் செய்துகொள்வது எனக்கு இட்டமே. சாவித்திரியின் நற்குணங்கள் அவளுடைய இனிய சாயலிலே விளங்குகின்றன. ஆனால் ஒரு காரியத்திற்கு அஞ்சுகின்றேன். நானும் என் மகனும் வறியவர்களாகிவிட்டோம். எங்கள் அரச செல்வத்தை யிழந்துவிட்டோம். இப்போது துறவு பூண்டு வனத்தில் இருக்கின்றோம். உமது திருமகளோ அரச செல்வத்திற் றிளைத்தவள். கட்ட நிட்டூரங்களை யறியாதவள். வறுமை யின்னதென்பதை யவளறியாள். அவள் வன வாழ்க்கையை விரும்புவாளா? என் மகன் இளவரசனாயிருந்து அவளை மணஞ்செய்தால் அப்பொழுதன்றோ நலஞ் சிறக்கும்", என்று சொன்னார்.

அதற்கு அசுவபதி கூறுவார்: "பெரியோய்! மின்னலினும் விரைந்து கெடுகின்ற அரச செல்வத்தைப் பொருளென மதியேன். கூத்தாட்டவைக் கண்ணே கூத்து நடக்கும்பொழுது மக்கள் வந்து கூடி அது முடிந்தவுடன் போவதுபோலச் செல்வமும் புண்ணியப் பலன் நடக்கும்பொழுது உண்டாகி அது முடிந்தபின்பு இல்லையா யொழிந்து விடுகின்றது. சகடத்தின் கால்போல மேலுங் கீழுமாய் மாறி மாறி வருஞ் செல்வம் நிலையுள்ள பொருளோ? ஒரு நாளில் முற்பகலிலே பட்டத்து யானையின் பிடரியிலே வெண்கொற்றக்குடை

---

நிட்டூரம் – துன்பம். நலம் – நன்மை. சகடம் – வண்டி. கால் - சில்லு. மா – குதிரை.

நிழற்றப் பவனி போந்த மகாராசன், அற்றைப் பிற்பகலிலே நாடும் நகரமும் தேரும் மாவும் கொடியுங் குடையும் இழந்து, காதன் மனையாளை ஏதிலார் கொள்ளத் தான் ஓடு கைக்கொண்டு பிச்சை யேற்கின்ருன்.

"முல்லை மொட்டைப் போன்ற வெள்ளிய சோற்றைப் பொரிக் கறியுடன் பொற்கலத்திலிட்டு நேசமகளிர் ஆசையுட னூட்ட அருக்கி அருக்கி உண்ட பெருஞ் செல்வன், ஐயோ! தன் செல்வ மெல்லாம் கெட உணவின்றி வருந்தி, வெந்த இலையாயினும் இடுங்கள்" என்று தெருத் தெரு வாய்க் கூவி யிரந்துங் கிடையாது வருந்துவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்ருேம் அல்லமோ? எழுநிலை மாடங் கால்சாய்ந்த அன்றே கழுதை மேய்ப் பாழாயினும் ஆகும். இஃது உலக வியற்கை.

"இன்னும், பெரியோய்! கேட்டருள். இந்திரன் சூரனுக் கஞ்சிக் காடு போந்தான். பொன்னகர் கரிந்து பாழடைந்தது. சயந்தன் சிறையிடப் பட்டான். ஆகவே செல்வம் எங்கே நிலைக் கின்றது? அறிவுடையோர் செல்வம் வந்த பொழுது அகந்தையுமடையார். அது நீங்கின பொழுது துக்கமுமடையார். குப்பையிற் கிடந் தாலும் குன்றிமணி நிறங் குன்ருது. அதுபோல அறிவுடையோர் வறியராயினும் அவர் குலமும் ஒழுக்கமும் நீங்கா. பொன்னும் மணியும் பூமியும்

பொற்கலம்-பொன்னாலாகிய பாத்திரம். பொன்-அழகுக்கும் பெயர். அகந்தை - செருக்கு.

உடைமையல்ல, 'செல்வ மென்பது சிந்தையின் நிறைவே, அல்கா நல்குரவு அவாவெனப் படுமே' என்பது ஆன்றோர் வாக்கு. காதற்றவூசியுங் கடை வழிக்கு வராது. நமது குமாரத்தியும் செல்வத்தை விரும்பினவள் அல்லள்.

"இனி, மணத்தைக் குறித்த நீதியில் தந்தை மருமகனின் கல்வியையே நாடுவன்; தாய் சம்பத்தையே நாடுவள்; பெண் கைந்நிறைந்த பொன்னிலும் கண்ணிறைந்த புருடனையே நாடுவள். சத்தியவான் அழகுடையவன்; சற்குணன். ஆதலால், அன்பும் அறிவொழுக்கங்களும் அழகும் நிறைந்தவர் தம்முட் கலந்துகொள்ளும் மண வாழ்க்கை இந்திரச் செல்வத்திலும் மேம்பாடுடையது."

இருதிறத்தாரும் திருமணத்திற்கு உடன்பட்டனர். காட்டிலே முனிவர் ஆச்சிரமத்திலே நன்முகூர்த்தத்திலே சத்தியவானுக்கும் சாவித்திரிக்கும் கடிமணம் நடைபெற்றது. முனிவர்கள் எல்லோரும் மணமக்களை வாழ்த்தினார்கள். "ஆல்போற் றழைத்து அறுகுபோல் வேரூன்றி மூங்கில்போற் சுற்றம் முசியா தோங்கி மூவேழ் தலைமுறை வாழ்க." இருடி பத்தினிகள் இன்னுரை கூறி வாழ்த்தினர். அசுவபதியும் மனைவியும் சாவித்திரியை நாயகனோடு விட்டுத் தம் அரண்மனைக்குப் போய்விட்டார்கள்.

---

அல்கா - குறையாத. நல்குரவு - வறுமை. முசியாது - கெடாது.

சாவித்திரி தான் அணிந்திருந்த அரசமகளிர்க் குரிய உடைகளைக் களைந்து மரவுரியுங் காவியுந் தரித்து நாயகனுடன் நகமும் சதையும்போல ஒன்றி வாழ்ந்துவந்தாள். சத்தியவானின் ஆணை கடந்து அவள் ஒன்றுஞ் செய்யாள். அவனும் அவளை யன்றி அயலொருவரையுங் கனவிலுஞ் சிந்தியான். சாவித்திரி எங்ஙனங் கற்புநெறி தலைநின்றொழுகி ளுளோ அங்ஙனமே சத்தியவானும் கற்புநெறி தலைநின்று ஒழுகினன். பெண்கள் மட்டும் கற் புடையவர்களாக இருக்கவேண்டும். ஆடவர்க்கு அது நியதியில்லை என்று சிலர் எண்ணுகின்றனர். சத்தியவான் அப்படி எண்ணமுடையவனல்லன். அவ் வெண்ணம் பழுதுடையதென்பதும், ஆட வருங் கற்புநெறி தவறாது இருத்தல் வேண்டு மென்பதும அவன் துணிவு.

சாவித்திரி நாடோறும் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்குமுன் துயில் நீங்கி எழுந்து நாயகனைத் துயிலெழுப்பி அவனை வணங்கிக் கொள்வாள். பின்பு மாமன் மாமி ஆகிய இரு வரையுந் துயிலெழுப்பி அவர்களையும் வணங்கு வாள். வணங்கிச்சென்று நீராடுதல் முதலிய நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு வந்து முதனாட் சேமித்து வைத்த காய்கனிகளை மாமன் மாமியர்க்கும் நாயகனுக்கும் அருத்திச் சேடத்தைத் தானுண்பாள். பின்பு காட்டுக்குப் போய்க் காய் கனி மலர்களைப் பறித்துக்கொண்டு

---

துயில் - நித்திரை.

வரும்படி நாயகனை யனுப்பிவிட்டு, மாமன் மாமி யாகிய இருவருடனும் புராணக் கதைகளையும் அவற்றில் அமைந்த உண்மைநூற் கருத்துக் களையுங் கேட்டறிவாள்.

நாயகன் வந்தவுடன் அவன் கொண்டுவந்த காய் கனிகளை வாங்கிக்கொண்டு வழியிளைப் பாற்றி உபசரிப்பாள். இவ்வாறு சாவித்திரி மாமன் மாமி ஆகிய இருவரையும் தன் னிருகண் போல வும், நாயகனை கண்ணுண் மணி போலவும் கொண்டு அன்பு பாராட்டி வந்தாள். அவள்மீது மாமனுக்கும் மாமிக்கும் அளவிறந்த அன்பு உண்டாயிற்று.

அவள் வந்தபின் தாங்கள் மிக அன்பாக நேசித்துவந்த சத்தியவானையும் மறந்துவிட்டார்கள். சாவித்திரியின் காலிலே தைத்த முள்ளு அவர்க ளுக்குக் கண்ணிலே தைத்தாற்போல அத்துணை அன்பு அவள்மாட்டு அவர்களுக்கு உண்டாயிற்று. நாம் முற்பிறவிகளிற் செய்த நல்வினையின் விளைவி னாற்றான் சாவித்திரி தமக்கு மருமகளாய் வாய்த் தாள் என்று அவர்கள் அடிக்கடி கூறிக்கொள் வார்கள். 'மாமியார் மெச்சிய மருமகளில்லை' என்ற பழமொழி சாவித்திரியிடத்துப் பொய்யாகிவிட்டது.

---

அத்துணை - அவ்வளவு.

# 7. சத்தியவான் இறத்தல்

இங்ஙனம் பலநாள்கள் இன்பமாய்க் கழிந்தன. இருவரும் பயிெெடு சேர்ந்த கல்லைப் போன்று பிரியாராய் இன்பிலும் துன்பிலும் ஒத்த மனத்தினராய் வாழ்ந்து வரலாயினர். கண்டோர் எல்லோரும் இவர்தங் காதலுறவைப் பாராட்டினர். திருமாலும் திருமகளு மொப்பார் இவரென்றார் சிலர். சிவபெருமானும் உமையம்மையாரும் ஒப்பார் இவரென்றார் சிலர். அழகிலும் அன்பிலும் இரதியும் மன்மதனு மொப்பார் என்றார் சிலர்.

சத்தியவான் பூமியிலிருப்பதற்குக் குறித்த ஆறிரு திங்களும் அகல்வனவாயின. சாவித்திரி நாளெண்ணிக்கொண்டே யிருந்தாள். நாயகன் இறத்தற்கு இன்னும் நான்கு நாள்கள் தானுள்ளன வென்று சாவித்திரி அறிந்தபொழுது "தெய்வமே! என்ன செய்யப் போகின்றேன்", என்று கலங்கினாள். என்னுடைய நாயகன் என்னை விட்டு அகலுங் காலம் அணுகிவிட்டதே! ஐயோ அவரை நீங்கி எங்ஙனம் உயிர் வாழப்போகின்றேன்? உயிரையின்றி உடல் வாழுமா? என்று பரிதபித்தாள். கடைசியாக அவள் உள்ளத்தில் ஒரு புத்தி தோன்றிற்று. 'மதியினால் விதியை வெல்லலாம். தெய்வத்தா லாகாதெனினும் முயற்சிதன் மெய் வருந்தக் கூலிதரும்.'

---

பயின் - பிசின். திருமால் - விட்டுணு. திருமகள் - இலக்குமி. பரிதவித்தாள் - துன்பமுற்றாள். விதி - ஊழ்வினைப்பயன். தெய்வம் - ஊழ்வினை.

'முன்பு செய்த கன்மத்தால் ஒரு துன்பம் வந்தால், அதனைப் பின்பு செய்கின்ற கன்மத்தினால் விலக்கிக் கொள்ளுதல் கூடுமென்று ஆன்றோர் கூறுகின்றனரே! முற்பிறவியிற் பிராரத்துவம் நோக்கிப் பதினாறு வயதென்று கடவுளாற் கொடுக்கப்பட்ட ஆயுளை, எடுத்த பிறவியிற் செய்த சிவபுண்ணியத்தால் மார்க்கண்டேயர் நீக்கிக்கொண்டாரல்லரோ? நானுங் கடவுளை வணங்கித் திரிராத்திரி விரதம் அநுட்டிப்பேன். கடவுள் வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் பரம கருணாநிதியாயின், என் வேண்டுகோளுக்கும் அருள்செய்வார்தானே' என்று எண்ணித் துணிந்தாள். துணிந்து விரதத்துக்கு வேண்டு மொழுங்குகளைச் செய்தும், பூசைக்கு வேண்டும் பொருள்களைத் தேடியும் ஆயத்தளாயினாள். பகலிலும் இரவிலும் ஒன்றும் உண்ணாதவளாய்த் திரிராத்திரி விரதத்தைச் சிரத்தையோடு அநுட்டிப்பாளாயினாள். அவள் மனம் கடவுள் திருவருளிற் பதிந்திருந்தது. தன்னாயகனுயிரை மீட்டுத்தருதல் வேண்டும் என்று அவள் கடவுளை வேண்டினாள். மூன்று நாளுஞ் சென்றன. நான்காவது நாள் வந்தது.

அன்றே சத்தியவானுக்கு ஆயுள் முடியும் நாள். சாவித்திரிக்குக் கவலை அதிகரித்ததாயினும் அதனை அவள் வெளிக்குக் காட்டவில்லை. மாமன் மாமியாருக்குச் செய்யும் பணிவிடைகளிற் குறைந்தாளில்லை. காலைப்பொழுது துன்பமின்றிக்

---

கன்மம் - வினை. பிராரத்துவம் - முன்செய்த வினை. கருணாநிதி - அருட்செல்வம்.

கழிந்தது. உச்சிப் பொழுதாயிற்று. அப்பொழுது மாமனும் மாமியும் சாவித்திரியைப் பார்த்து. "எங்கள் கண்மணியனைய செல்வீ! நீ மூன்று நாள் காறும் ஒன்று முண்ணது விரத மிருந்தாயே! உன்னுடம்பு மெலிந்துவிட்டதே! இனியாவது ஏதும் உண்ணக்கூடாதா? சிறிது காய் கனிகளை யாவது புசிக்கவேண்டும்" என்று இரந்து கேட்டார்கள். அதற்குச் சாவித்திரி "பொழுதுபடப் புசிக்கிறேன்; நீங்கள் வருந்தவேண்டா" என்று ஆறுதல் கூறினள்.

இஃது இவ்வாருக, சத்தியவான் காட்டுக்குப் போக நினைந்து ஒரு கூடையையும் கோடரியையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அது சாவித்திரிக்கு ஆற்ருெணக் கவலையை யுண்டாக்கியது. "ஐயையோ! விதிதான் அவரைக் காட்டுக்கு இழுத்துச் செல்கின்றது. நாமெல்லாம் விதியின் கையில் விளையாட்டுப் பொருள்கள்; இன்றைக்கு இவரைத் தன்னந் தனியே விடக் கூடாது. நானுங் கூடிக்கொண்டு போவேன். அப்பாற் கடவுள் திருவருள் நடைபெறுக" என்று எண்ணிக்கொண்டு நாயகனைப் பார்த்து, "பிராண நாதா! நான் இன்றைத்குத் தேவரீருடன் காட்டுக்கு வர விரும்புகின்றேன். திருவுள்ள மெப்படியோ" என்ருள். அதற்கு அவன், கண்மணி யனையாய்! உனக்கு விருப்பமானுற் தடையின்றி வரலாம்; ஆனல் உனது பூவிலும் மெல்லிய பாதங்கள் கல்லிலும் முள்ளிலும் பட்டு வருத்தந் தருமன்றே! அதனை நான் எப்படிச் சகிப்பேன்" என்ருன் சாவித்திரி, "உங்களோடு வருவது

எனக்கு இன்பமேயன்றித் துன்பஞ் சிறிதும் இல்லை. உங்களைக் கணமேனும் பிரிந்திருப்பதே எல்லை யற்ற துன்பந் தரும்" என்று கூறினாள்.

கூறியதும், மாமன் மாமியர் விடையின்றிப் போதல் நல்ல மருமகளுக்கு அழகில்லையென்று சிந்தித்து அவர்பாற் சென்று வணங்கி விடை கேட்டாள். நெடிய விரதமிருந்து வருந்தியவளைக் கொடிய காட்டிற்கு விட அவர்கள் விரும்பவில்லை. போகவேண்டுமென்று தடுத்தற்கும் நாவெழ வில்லை. இங்ஙனம் அவர்கள் மனம் இருபாற்பட்டு இடையூசலாயிற்று. பின்பு ஒருவாறு தேறிப் போகும்படி விடை கொடுத்தார்கள். முதனாள் இராத் தாங் கண்ட தீக் கனவையெண்ணி யெண்ணிப் பெரிதும் வருந்தினார்கள். அதனைச் சாவித்திரிக்காவது சத்தியவானுக்காவது சொன் னால், வருந்துவார்கள் என்று சொல்லாது விட் டார்கள். சாவித்திரியைப் பாதுகாப்போடு கூட்டிக் கொண்டு சென்று வரும்படி தம் மைந்தனுக்குத் திட்டமாகக் கட்டளையிட்டார்கள்.

இருமுது குரவர் திருவடிகளிலும் விழுந்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு இருவரும் புறப்பட்டுக் காடு நோக்கிச் சென்றார்கள். செல் லும் வழியிற் றீய நிமித்தங்கள் தோன்றின. சாவித்திரியின் நெஞ்சில் நிரம்பிய துக்கங் குடி கொண்டிருந்தாலும், முகத்திலே மகிழ்ச்சி சிறிதும் மாறவில்லை. முத்துப்போன்ற பற்கள்

---

தீய நிமித்தங்கள் - தீமையை முன்னறிவிக்கும் சகுனங்கள்.

சிறிது தோன்ற புன்முறுவல் காட்டிக்கொண்டே செல்வாளாயினள். தான் துக்கமுகங் காட்டினால், நாயகன் அதனைக் கூர்ந்து நோக்கிக் காரணங் கேட்பான்; கேட்கும்வழித் தப்பாது கூறல் வேண்டும்; கூறினால் நாயகன் ஏங்கி வருந்துவான். அங்ஙனம் நிகழாவண்ணம் அவள் தனது துக்கத்தை மறைத்துச் சென்றாள்.

இருவரும் வனத்தை அடைந்தனர். வனத்திலே மரங்களெல்லாம் தளிர்த்தும் பூத்தும் காய்த்தும் பழுத்தும் அலங்காரமாயிருந்தன. அவ்வனத்தின் இயற்கை வனப்பினை ஒருவன் கண்டால் இயல்பாகவே அவனுக்கு ஆனந்தமுண்டாகும். ஆனந்த முண்டாகும்போது, இசையோடு கூடிய பாட்டுக்கள் வருவதும் இயற்கையே. ஒரு நல்லிசைப் புலவனுக்கு அத்தகைய வனம் கற்பனையை யுண்டாக்கும் இடமாகும். அப் புலவன் மெய்ம்மறந்து அதன் அழகிலே இழுப்புண்டு சராசரங்கள் எல்லாவற்றையும் அங்கே கண்டு மகிழ்வான்.

சத்தியவான் சிறந்த கல்விமான்; ஆதலால் அவன் வனத்தின் அழகினைக் கண்டு வியந்து பாடத் தொடங்கினான். தான் கண்ட காட்சிகளைப் பின்வருமாறு சாவித்திரிக்குக் கூறுகின்றான்:

தேன்போதிந்த வின்பமொழிச் சேயிழையே வாராய்
தீங்குரலிற் பூங்குயில்கள் கூவுவன வோராய்
மான்போதிந்த கோலவிழி மாமயிலே நேராய்
வன்னமயில் நின்றுநட மாடுவது பாராய்.

---

புன்முறுவல் - குறுநகை. சரம் - இயங்கு திணைப் பொருள்கள். அசரம்-நிலத்திணைப்பொருள்கள். சர + அசரம் = சராசரம்.

அங்கமல வாவிதோறுந் தங்கிவிளை யாடும்
அன்னமுன தின்னடைய றியவந்து கூடும்
செங்கமல முன்வதனங் கண்டழகு வாடும்
திங்களெனப் பைங்குமுதம் போங்கிமண நீடும்.

கிஞ்சுகவா யஞ்சுகமே நீமகிழ்ந்து பேசும்
கீதமொழி கேட்டபின்பு கிள்ளையுளங் கூசும்
அஞ்சிலம்பு கொஞ்சுமடி யஞ்சிமணம் வீசும்
அம்புயங்கள் வாவிபுக வங்கரிக ளேசும்.

திங்களுறை கின்றவிளந் தண்டலைகள் காணாய்
தென்றலுல வும்பளிங்கு மன்றமிவை காணாய்
அங்கண்வெளி முட்டமேலை யங்கவைகள் காணாய்
அம்மலையின் மேகமிழைப் பாறுவதுங் காணாய்.

அன்னநடை வன்னவிடை யங்கமல மின்னே
அன்பினுட னின்பமொழி பேசலையி தென்னே
முன்னமுள நன்மரம டைந்துகனி யின்னே
மொட்டுமல ரும்பறிக்க வெட்டிநட பொன்னே.

என்று இவ்வாறு சத்தியவான் வனத்து வளப் பங்களைச் சாவித்திரிக்குக் காட்டிக்கொண்டு சென்றான். அவளுக்கோ அவற்றிற் கருத்துச் செல்லவில்லை. அவற்றைக் காது கொடுத்துக் கேட்பவள்போல நடித்துக்கொண்டு நாயகன் மேற் கண்ணுங் கருத்துமாய்ச் சென்றாள்.

நாயகனுடைய காலடியையும், முகக்குறிப் பையுங் கருத்தூன்றிப் பார்த்தாள். சத்தியவான் பழங்களும் பூக்களும் பறித்து நாயகி கையி லிருந்த பூக் கூடையுட் போட்டான். அதன்பின் கத்தியை எடுத்துக்கொண்டு ஒரு மரத்திலேறி அதிற் பட்டிருந்த ஒரு கொம்பை வெட்டினான்.

---

வதனம்-முகம். கிஞ்சுகம்-முருக்கம்பூ. அஞ்சுகம்-கிளி. கிள்ளை-கிளி. கமலம், அம்புயம்-தாமரை. வன்னம்-அழகு.

வெட்டும்போதே உடம்பில் வியர்வை தோன்றிற்று. வனத்திலே சட்டெனத் தோன்றிய குளிர் காற்று அவன்மேல் வீசியது. உடனே அவனுக்குக் குளிர் மேலிட்டது. மரத்திலிருந்து மெல்லக் கீழிறங்கினான்.

கையிலுள்ள கத்தி தவறிக் கீழே விழுந்தது. உடம்பு நடுங்கினது. அவன் சாவித்திரியைக் கூப்பிட்டு, "என் கண்ணே! இப்போது என் கை கால்கள் சோருகின்றன. உடம்பு பதைக்கின்றது. இடை சாய்ந்து போகின்றது. ஆயிரங் கூரிய கத்தியாற் குத்தினாற்போலத் தலை வலிப்பெடுக்கின்றது. கண்கள் பஞ்சடைகின்றன" என்று கூறிக்கொண்டு நிலத்திலே சாய்ந்தான்.

சாவித்திரி உடனே அவன் தலையைத் தன் மடிமீது எடுத்து வைத்துத் தடவிக் கடவுளைத் தியானித்துக்கொண்டிருந்தாள்.

சத்தியவான் சிறிது நேரத்திற் கண்விழித்து, "என்னன்பே! எனக்குச் சாகுங் காலஞ் சமீபித்தது. என்னுடைய நாத் தளருகின்றது. பேச முடியவில்லை. நான் உன்னையும் தாய் தந்தையரையும் விட்டு எங்ஙனம் பிரியப் போகின்றேன். நீ கவலைப்படாதே. பெற்றோரை நன்றாகப் பார்த்துக்கொள். என்னுயிரே! சிந்தாமணியே!! எனக்கு விடை கொடு. யான் போகின்றேன்", என்று மென்மையாகக் கூறி வாயடங்கினான். கண்கள் மூடுண்டன. செவிகள் கேட்கவில்லை. மூச்சு நின்றுவிட்டது.

---

சிந்தாமணி — நினைப்பவற்றைக் கொடுக்கும் ஒரு தெய்வக்கல்.

## 8. காலன் வரங் கொடுத்தல்

சாவித்திரிக்கு முன்பாக அஞ்சத் தகுந்த வடிவமொன்று கதுமெனத் தோன்றிற்று. அதன் தலையில் முடியிருந்தது. காதுகளிற் குண்டலங்கள் மிளிர்ந்தன. அஃது இருள் திரண்டாற்போன்ற வடிவமுடையதாயிருந்தது; ஒரு கையிற் சூலமும் ஒரு கையிற் பாசமும் விளங்கின. அவ் வடிவத்தைச் சாவித்திரி கண்டு நடுங்கினாள். எனினும், மனத்திட்ப முடையவளா யிருந்தபடியே அதனைத் தலையினால் வணங்கி, "உன்னைப் பார்த்தால் தேவரில் ஒருவனாகக் காணப்படுகிறாய்; நீ யாவன்; நீ வந்த காரணம் யாது?" என்று கேட்டாள்.

அதற்கு அவ் வடிவம் "நான்தான் கூற்றுவன். உயிர்களின் வாழ்நாள் முடிந்தால் அவைகளைக் கவர்ந்து செல்லுதல் என் றொழில். தீவினை செய்த ஆன்மாக்களை என் தூதுவரால் வருத்திப் பிடிப்பேன். நல்வினை செய்தோரிடத்து நானே நேரிற் செல்வேன். உன் காதலன் மிக நல்லவன். எப்பொழுதும் புண்ணியமே செய்பவன். கனவிலும் பொய் சொல்லான். நல்ல காரியங்களை விரும்பிச் செய்பவன். ஆனால், அவனுடைய வாழ்நாள் இன்றோடு முடிகின்றது. அவனைக் கொண்டு செல்ல வந்தேன்", என்று கூறிக் கையிலிருந்த

---

கதுமென - சடுதியாக. குண்டலம் - தோடு. பாசம் - கயிறு. மனத்திட்பம்-மனவலிமை. கூற்றுவன்-உயிரை உடம்பினின்றும் பிரிப்பவன்.

கயிற்ருற் சத்தியவானுடைய ஆன்மாவைக் கட்டிக் கொண்டு தென்றிசையை நோக்கிச் சென்றது.

சாவித்திரி அதுகண்டு சத்தியவானுடைய உடலை மெல்லென நிலத்தில் வைத்துவிட்டு, "நாயகனைப் பிரிந்து நான் இங்கேயிருத்தல் தக்க தன்று. நாயகனை யிழந்த பெண்கள் பிணத்துக்கு நிகராவர். நாயகனேடு கூட நானுஞ் செல்வேன்", என்று காலன் செல்லுந் திசையை நோக்கி விரைந்து நடந்தாள். சாவித்திரி தொடர்ந்து வருதலைக் கண்ட காலன் நின்று அவளை யன்போடு நோக்கிக், "குழந்தாய்! நீ மகா பதிவிரதை; நல்லொழுக்கமும் சிவபத்தியும் உடையவள்; ஆதலால் என்னைக் காணப்பெற்ருய். ஏனையோர் என்னைக் காணப்பெருர். இப்போது நான் சொல்வதைக் கேள். உலகத்திலே தோன்றியவெல்லாம் அழிவெய்தும். அழிவடையாது நிற்பன வொன்றுமே இல்லை. பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு ஆகிய இவைகள் ஆறும் கருக்கொள்ளும் பொழுதே நியமிக்கப்பட்டன. நேற்று உயிரோடிருந்தவர் இன்று உயிரிழக்கின்ருர். இன்று உயிரோடிருப்பவர் நாளைக்கும் இருப்பாரென்று நிச்சயமாய்க் கூற முடியாது.

"ஆயுள் முடிந்தால் எப்பொழுதாயினுங் காலன் வருவான். தூண்டிவிட்டு மீனைப் பிடிக்கும்

---

காலன் - கால முடிவிலே உயிரைக் கவர்பவன். பதிவிரதை - கற்பில் சிறந்தவள். சிவபத்தி - சிவனிடத்தில் நீங்கா அன்பு. நிச்சயம் - உறுதி.

வலைஞன் மிதவையையே நோக்கியிருந்து மீன் அகப் பட்ட தறிந்தவுடன் அதனைக் கரைக்கு எடுப்பது போல, யாமும் காலம் பார்த்திருந்து உயிர்களைக் கவருகின்றோம். இறப்பதும் பிறப்பதும் உலகத் தியற்கை. சாவது புதியதொரு நிகழ்ச்சியன்று. நாளொன்றுக்கு ஆயிரகோடி ஆன்மாக்கள் இறக்கும்; ஆயிரகோடி பிறக்கும்; ஆன்மாக் களின் வினைப் பயன்களே இறப்புக்கும் பிறப் புக்குங் காரணம். ஆதலாற் பெண்ணணங்கே! மரணத்துக்கு விசனப்படாதே! நீ கால் வருந்த நடக்க வேண்டா! நீ உன் நாயகனுக்குச் செய்யவேண்டிய தெல்லாஞ் செய்து முடித்து விட்டாய். இனிப் போய் அவனுக்குரிய தீக்கடன் நீர்க்கடன்களைச் செவ்வனே செய்து முடி. என்னுடன் வராதே" என்று கூறி நடந்தான்.

அதனைக் கேட்ட சாவித்திரி கண்ணீர் விட் டழுதாள். "ஐயனே! என்னாயகனும் நானும் உடலும் உயிரும்போ லிசைந்து நேசமாக இத்தனை நாளும் வாழ்ந்தோம். அவர் என்னைப் பிரிந் தொருகணமும் வாழ்ந்ததில்லை. நீர் இப்போது அவரைப் பிரித்துச் செல்கின்றீர். அது தரும மாகுமா? நான் என்னுருயிர்க் காதலனை விட்டுப் பிரிந்திருக்க மாட்டேன். அவர் எங்கே போகின் றுரோ அங்குப் போவதே என் கடன்", என்று கூறிக் கல்லென்றும் முள்ளென்றும் காடென்றும் மேடென்றும் பாராது காலன்பின்னே நடந்தாள்.

---

விசனம் - துன்பம்.

காலன் இவளுடைய நாயக பத்தியையும் உறுதிப்பாட்டையுங் கண்டு தனக்குள்ளே மகிழ்ந்து "பெண்ணே! பொழுது படப் போகின்றது. வழியோ கடுமையுங் கொடுமையு முடையது. சிங்கம் புலி கரடி யானை முதலிய கொடிய விலங்குகள் இவ் வனத்தில் மிகுதியுண்டு. கொடிய நச்சுப் பாம்புகள் இராக் காலத்தில் இரை தேடி வெளியே வரும். நீ ஒன்றியாய் என்னுடன் ஏன் வருகின்றாய். உன் கால்கள் பீறுண்டு உதிரங் கக்குகின்றனவே. உன் நாயகனுடைய உயிரை விட்டு வேறு ஏதும் வரங்கேள். தருகின்றேன். பெற்றுக்கொண்டு திரும்பிச் செல். என்னைத் தொடராதே", என்று கூறினான்.

காலன் சிறிது மனமிளகியது வாய்ப்புப் போலும் என்று சாவித்திரி நினைத்தாள். கடவுள் வழிபாட்டால் ஆகாத தொன்றில்லை யென்று கருதித் தன் மனத்திலே செம்பொருட் சிவத்தை யுறைப்பச் சிந்தித்துக்கொண்டாள். "தரும பூபதியே! அறப் பெருங் கடவுளே! இரண்டு வரங் கேட்கின்றேன். முதலில் அவைகளைத் தந்தருள்க. என் மாமனுக்கும் மாமிக்கும் கண் தெரியாது. அவர்கள் இராச்சியத்தையும் இழந்து காட்டி லிருக்கின்றார்கள். அவர்களுக்குக் கண்கள் தெரியுமாறும், இழந்த இராச்சியத்தை மீளப் பெறுமாறும் வரந்தருக", என்று வேண்டி நின்றாள். நின்றாளுக்குக் காலன், "அங்ஙனமே யாகுக", என்று கூறி மிக விரைந்து போகச் சாவித்திரி மீட்டும் பின் றொடர்ந்தாள்.

---

பூபதி - அரசன்.

சிறிது தூரஞ் சென்றபின், காலன் திரும்பிப் பார்த்தான். சாவித்திரியின் கொளுத்தக்கொண்டு, கொண்டது விடாமையாகிய மடம் இத்தகையதோ வென்று கருதி, "அம்மா! நீ சொல்லச் சொல்லக் கேளாது வருகின்ருய்! நீ ஏன் இப்படி வருத்த முறுகின்ருய்; திரும்பிப் போ" என்ருன். அன்புக்கு முண்டோ அடைக்குந் தாழ். காதலனை விட்டு நீங்கிச் சாவித்திரி வாழ்வாளோ? அவள் காலனைப் பின் வருமாறு இரந்து வேண்டினுள். "சூரிய தேவ னுக்கும் சாயா தேவிக்கும் தோன்றிய தோன் றலே! தருமமூர்த்தி!! நாயகன் இல்லாத வாழ் வில் நயமுண்டோ? புருடனை யிழந்த பூவை பிணம். என் பிராணபதியை நீர் கொண்டு செல்கிறீர். நான் திரும்பி யெங்கே போவது? என் பிராண நாதன் சமுகத்தில் எனக்குக் களை தோன்றுமா? அன்றி, அறக் கடவுளாகிய தேவரீர் சமுகத்திலே எனக்குக் களை தோன்றுமா?

"உலகத்திற் சனங்கள் தேவரீருக்கு அஞ்சு கிருர்கள். எனக்கோ நீர் தயையும் அருளும் ஆதரவுமுடைய புண்ணிய வடிவினராய் இருக் கின்றீர். நீர் சங்கார கருத்தா மட்டுமல்லீர்; திதி கருத்தாவும் நீரே; சிருட்டி கருத்தாவும் நீரே; நீர் நீதியின் மன்னவர். நீர் பேசுவது சத்தியம்; செய்வது நடுவுநிலைமை. நான் உம் மைத் தஞ்சமென்று அடைந்தேன். பாதுகாப்பது உங்கடன்."

---

மடம் - பிடிவாதக் குணம். தோன்றல் - மகன். சங்காரம் - அழிவு. திதி - காப்பு. சிருட்டி - படைப்பு. தஞ்சம் - அடைக்கலம்.

# 9. கணவனுயிர் மீட்டல்

சாவித்திரியின் இன்னுரைகளைக் கேட்ட கூற்றுவனுக்கு நெஞ்சம் நெகிழ்ந்தது. அவள் தோத்திரத்துக்கு ஆனந்தமடைந்தான். "பெண்ணே! சத்தியவானைத் தவிர்த்து வேறு எந்த வரமாயினுங் கேள். தருகின்றேன்" என்று கூறச் சாவித்திரி, "தேவரீருக்கு அங்ஙனம் விருப்பமுண்டாயின், என் தந்தைக்கு நூறு புதல்வர் பிறக்குமாறு அருள் செய்க", என்றாள். இயமன் "அங்ஙனமாகுக" என்று கூறித் தன்வழியே போனான்.

சாவித்திரியோ இயமதரும ராசனுடைய தயாளகுணத்தினாலும் அன்பினாலும் மனந் தேறி அவனைப் பலவாறு புகழ்ந்துகொண்டு விடாது பின்தொடர்ந்து சென்றாள். அது கண்ட இயமன் திரும்பி, "மகளே! நீ மகா புத்திசாலி; சிறந்தவொழுக்கமுடையவள்; உலகத்திலே யுள்ளவர்கள் என்னைக் கொடியவன் என்று ஏசுவதன்றி நீதிமானென்று புகழ்ந்திரார். சத்தியவானுடைய ஆயுளை விட்டு இன்னும் ஒரு வரங் கேள்" என்று கூறச் சாவித்திரி, "புருடோத்தமா! எனக்கும் பிராணநாதனுக்கும் நூறு மக்கள் உண்டாகும்படி வரந்தருக," என்று சாதுரியமாகக் கேட்டாள். செங்கோற் கடவுள், "அவ் வரந்தந்தேன். இனி நீ செல்லலாம்" என்று விரைவாக நடக்கச் சாவித்திரி உடலைத் தொடரும் நிழலைப்போல இயமனைப் பின்தொடர்ந்தாள்.

---

இன்னுரைகள் – இனிய வாசகங்கள். தோத்திரம் – வழிபாடு.

கூற்றுவன் சிறிது பொறுத்து நின்று "சாவித் திரீ! இஃது என்ன தொல்லையா யிருக்கிறது. நீ சொல்வழி கேட்கின்ருயில்லை. இன்னும் ஒரு வரங் கேட்டுக்கொண்டு என்னை விட்டுவிடு", என்ருன். சாவித்திரி இதுதான் தக்க சமயமென்று கருதி, "ஓ! புண்ணிய முதலே! தரும மூர்த்தி! சத்திய வசனு! கருணைக் கடலே!! குணப்பொற்குன்றே!! தேவரீர் எனக்கும் என்னுயகனுக்கும் நூறு புதல் வர் உண்டாகுமாறு வரமளித்தீரே. நாயகனை நீர் கொண்டுசென்ருற் புதல்வர் உண்டாவதெப்படி? தேவரீருடைய திருவாக்குப் பொய்க்குமா? 'மக்க ளிழந்த விடும்பையினும் மனையாளிழந்த விடும்பை யினும், மிக்க விடும்பை யோவாத விதவை யிடும்பை'. எனக்கு மங்கலியப் பிச்சை தந்தருள்க. நல்லோ ரைத் தரிசித்தோர் நன்மை யடைவர். தீயோர்க் குக் கிட்டுதற்கரிய தேவரீரை நான் தரிசித்த பின்பும் அமங்கலியா யிருப்பேனு? சுமங்கலி யாக வன்றே இருத்தல் முறைமை. என்னுயகன் உயிரை எனக்குத் தந்தருள்க. தேவரீர் திருவடி களுக்குக் கோடி வணக்கம்", என்று குறையிரந்து வேண்டினுள்.

அறக் கடவுளுக்கு அடங்காத மகிழ்ச்சியுண் டாயிற்று. "கற்பிற் சிறந்த காரிகையே! அஞ் சாதே. உனக்கு அவ் வரமுந் தந்தேன். நீயும் உன்னுயகனும் பல்லாண்டு பல்லாண்டு சிரஞ் சீவிகளாய் வாழுமின்! இரும்பு உண்ட நீரும்

---

சொல்வழி - புத்திமதி. இடும்பை - துன்பம். அமங் கலி - தாலியை இழந்தவள். சுமங்கலி - கணவனுேடு மங்கலமாய் வாழ்பவள். முறைமை - நீதி. காரிகை- அழகுடைய பெண்.

என் கைப்பட்ட வுயிரும் திரும்பமாட்டாவென்று பழமொழியுண்டு. ஆனல் நீ அதை யின்று பொய்யாக்கினை. உங்களாற் பூவுலகத்திற் சிறப்புக்கள் நடைபெற விருக்கின்றன. அவைகளை முடித்துக்கொண்டு சுவர்க்கத்தை யடைந்து அங்கேயும் அன்பிற் கெழுமி இணைபிரியாது வாழுமின்", என்று வாழ்த்தி மறைந்துவிட்டான்.

சாவித்திரி எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வணங்கி அளவற்ற மனக் கிளர்ச்சியுடன் ஆனந்தக் கண்ணீர் சொரிய, நாயகன் கிடந்த இடத்தை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்து அவன் பக்கலில் இருந்தாள். இருந்தவள் அவன் தலையை எடுத்து மடிமீது வைத்துக் கொண்டு அவன் திருமுகத்தைப் பார்த்தாள். பெருமகிழ்ச்சி பொங்க "என்னுயிரே! கண்மணியே! எழுந்திருக்காயோ!" என்று அன்புரை கூறி யவன் முகத்தைக் கையாற் றடவினுள்.

சத்தியவானது முகமண்டிலங் களை நீங்கித் தெளிவடைந்தது. அன்று அலர்ந்த செந்தாமரைப் பூப்போல அழகு கொண்டது. கண்கள் ஒளியுடன் திகழ்ந்தன. மூச்சு உண்டாயிற்று. சத்தியவான் உயிர்த் தெழுந்தான். எழுந்ததும், தன் மனைவியின் முகத்தை நோக்கி, "பிராண நாயகி! நெடும்பொழுது தூங்கிவிட்டேன். நீ ஏன் எழுப்பாது விட்டாய். ஆச்சிரமத்திலே தந்தை தாயர் வருந்தப்போகின்றார்களே! அது கிடக்க, என்னன்புடைய செல்வீ! நான் துயின்றபொழுது,

---

கெழுமி - பொருந்தி. பக்கல் - பக்கம்,

கறுத்த நிறமுடைய ஒருவன் என்னைக் கயிற்றி ஞற் கட்டிக்கொண்டு தெற்கே போகவும், ஒரு பெண் அவனைப் பின் ருெடர்ந்து இன்சொற் கூறி என்னை மீட்டுக்கொண்டு வரவும் கனக் கண்டேன். இதன் பயன் யாது?" என்று கேட்டான்.

சாவித்திரி புன்னகை செய்து, "என் பிராண பதியே! நீர் கண்டது கனவன்று, உண்மை நிகழ்ச்சியே. அதன் வரலாறு இது", என்று தான் வனத்திலே சத்தியவானைக் கண்டதும், அவனைப் பற்றி நாரத முனிவரை வினவியதும், நாரதர் ஓராண்டில் இறப்பு நேருமென்றுரைத் ததும், தான் திரிராத்திரி விரதம் பூண்டதும், இயமன் வந்து ஆருயிரைக் கவர்ந்ததும், பின் னர் இரந்து மீட்டதும் ஆகிய எல்லாச் செய்தி களையும் ஒன்று மொளியாது எடுத்துரைத்தாள்.

தந்தை தாயர்க்குக் கண் தெரிதற்கும், அவர் கள் பழையபடி அரசியலைப் பெற்றுக்கொள்ளு தற்குந் தான் அறக் கடவுளை வரங்கேட்டுப் பெற்றுக்கொண்டதையும் சாவித்திரி எடுத் துரைத்தாள். அவைகளை ஒவ்வொன்ருய் அறிந்த சத்தியவான் ஆனந்தக் கடலுள் மூழ்கியவ ஞய்ச் சாவித்திரியைக் கட்டியணைத்து, "எங்கள் குலமெல்லாம் வாழவந்த கற்புடைய காதலியே! உன்னை மனைவியாகப் பெற்ற எனக்கு என்ன குறை? என்னுயிரே! நான் உன்னை எவ்வாறு புகழ்வேன்" என்று கூறித் தேவியுடன் எழுந்து ஆச்சிரமத்தை நோக்கிக் கடுகி நடந்துபோனன்.

---

புன்னகை — சிறிய சிரிப்பு.

அவர்களுக்கு வழியெல்லாம் இன்பமாயிருந்தது. இனிய தென்றற் காற்று வீசிற்று. கற்பரசியின் பெருமையைப் பேசுவன போலக் கோகிலங்கள் கூவின. அவள் இல்லறச் சிறப்பினை நோக்கி மகிழ்வனபோல் முல்லைகள் பூத்துப் பொலிந்தன.

---

## 10. எல்லாம் மங்கலமாதல்

ஆச்சிரமத்தில் இருந்த இரு முதுகுரவரும், மகனும் மருமகளும் நேரத்துக்கு வராமையால் மனம் நொந்து வருந்தினர். தாம் முதனாட் கண்ட திக் கனவின் பயனையும் ஆராய்ந்து, அது ஈற்றில் எல்லார்க்கும் இன்பந் தருமென்று துணிந்து சிறிது ஆறுதலடைந்தனர். சாவித்திரியில்லாத ஆச்சிரமம் திங்களில்லாத வானம் போலவும், பங்கயம் இல்லாத பொய்கை போலவும் பொலிவு குன்றிக் கிடப்பதைக் கண்டு வருந்தினர். "ஐயோ! பொழுது போய்விட்டதே. விலங்குகளாற் கலக்கமடைந்தனரோ? வேறு ஏதுந் தீங்கு நேர்ந்ததோ? எங்களுக்குக் கண்கள் தெரிகின்றனவே. இஃதென்ன வியப்பு', என்று பேசிக்கொண்டு அவர்களைத் தேடிப் புறப்பட்டார்கள்.

சத்தியவானுஞ் சாவித்திரியும் வருவது கண்டு அவர்களை வாரியணைத்து முத்தமிட்

---

இரு முதுகுரவர்-தாய் தந்தையர்; திங்கள்-சந்திரன். பங்கயம்-தாமரை.

டார்கள். "காலையிற் போன நீங்கள் இதுகாறும் வாராது தாழ்ந்ததற்குக் காரணமென்னை"? என்று பதைப்போடு கேட்டார்கள். சாவித்திரி நிகழ்ந்த செய்திகளை யெல்லாம் ஆதியோடந்தமாக விரித்துரைத்தாள். முதியோர் இருவருங் கேட்டு முடிவிலா மகிழ்ச்சி கொண்டார்கள். "சாவித்திரியே! இதுவரையில் உன்னை எங்கள் மருமகளென்று எண்ணியிருந்தோம். இனி நீயே, எங்கள் குடிமுழுது முய்யவந்த குலதெய்வம்; உன்னால் எங்கள் வாழ்வு தழைத்தது", என்று வாயார வாழ்த்திக் கொண்டாடினார்கள். பிரிந்தவர் கூடினாற் பேசல் வேண்டுமோ'.

இஃதிப்படியிருக்க, சாலுவ தேசத்தைச் சமரில் வென்று ஆண்ட பகையரசன் தற்செயலாய் இறந்துவிட்டான். பழைய அமைச்சர் தியுமற்சேனரிடம் வந்து அவரை அழைத்துச் சென்று அரசனாக்கினார்கள். குடிமக்கள் தியுமற்சேனரையும் சாவித்திரி சத்தியவானையுங் கண்குளிரக் கண்டு, ஆடல் பாடல்களோடு வரவேற்று வாடும் பயிர்க்கு மாமழை கிடைத்தாற் போல உள்ளம் பூப்பாராயினர். சத்தியவான் இளவரசனாகித் தன் கற்பின் பெருமையாற் தன்னுயிர் மீட்ட காதலியுடன் இன்புற்று வாழ்ந்தான். அசுவபதி யரசன் அதனைக் கேள்வியுற்று வியப்பும் நயப்பு மெய்தித் தேவியுடன் சாலுவ தேயஞ் சென்று தியுமற்சேனரா லுபசரிக்கப்பட்டு மகளையும் மருமகனையுங் கண்டு களிப்

---

சமர் - போர்; அமைச்சர் - மந்திரிமார்.

படைந்தார்கள். எல்லாம் மங்கலமாக முடிந்த திறத்தை நினைந்து கழிபேருவகை கொண்டனர்.

தியுமற்சேனர் அசுபவதியைப் பார்த்து, "அரசே! பெருந்தகையே!! நீ தவஞ்செய்து பெற்ற கற்புக்கரசியாகிய சாவித்திரியால் இழந்த அரசை மீட்டும் பெற்றுக் கொண்டோம். கண் பார்வையும் பெற்றேம். சத்தியவானும் உயிர் பிழைத்தான். அவளே எங்கள் குலதெய்வம்", என்று மருமகளை வாயாரப் புகழ்ந்தார்.

அசுவபதி யரசன் விடைபெற்று மத்திர தேயத்துக்குச் சென்றான். அறக்கடவுளின் வரப் படி சத்தியவானுக்கு நூறு புதல்வர் பிறந்து செழித்து வாழ்ந்தார்கள். தியுமற்சேனரின் பின் சத்தியவான் அரசனாகி அன்புடைக் காதலி யோடு இன்புற்றுப் பல்லாண்டு வாழ்ந்தான். சாலுவ தேயத்திலே தருமந் தழைத்தது. குடி கள் வறுமை, பிணி முதலியன வின்றி நலமாய் வாழ்ந்தார்கள். ஆங்குள்ள ஆடவர்களெல்லாம் சத்தியவானைப் போல நற்குணமும் நற்செயலும் கருணையும் உடையவர்களானார்கள். பெண்க ளெல்லாம் சாவித்திரியே தங்கள் தெய்வ மென்று கருதி மேம்பட்டுக் கற்பின் செல்விய ராய்த் திகழ்ந்தார்கள். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி'. எல்லாம் மங்கலமாயிற்று.

இக் கதையைப் படிப்போர் கற்பின் பெரு மையை நன்கு அறிவார்கள். விதியைக் கற்பு

---

கழிபேருவகை - மிகப் பெரிய மகிழ்ச்சி. பிணி - நோய்.

வென்றது. கற்புடைய சாவித்திரியினால் நாயகன் உயிர்பெற்றான்; மாமன் மாமியார் கண் பெற்றார் கள். ஆண்களும் பெண்களும் கற்புடையோராய் வாழ்ந்து வருவாராகில், இவ்வுலகம் தெய்வ நாடு போலச் சிறப்புற் றோங்குமன்றே! ஐயாயிர வாண்டுகளாகக் கற்பொழுக்கத்திற் செழிப்புற்றுத் திகழ்ந்து வந்த தமிழகம், இந்நாளிலே, மேலை நாட்டு வேண்டாப் பழக்க வழக்கங்களாற் சீரழிந்து பெண்கள் பெண்மையிற் றவறியும், ஆண்கள் ஆண்மையிற் றவறியும், அல்லற்படு கின்றனர். இக் கதையைப் படிக்கும் ஆண்களும் பெண்களும் தாம் நன்னெறியிலே யொழுகப் பழகிக்கொள்வாராக.

இதனைப் படிப்போரும் கேட்போரும் கேட்டுப் பிறர்க் குரைப்போரும் எல்லா நலனும் பெற்று மங்கலமாய்ப் பல்லாண்டு வாழ்வர்.

சாவித்திரி கதை முற்றிற்று.

---

தமிழகம் - தமிழ்நாடு. மேலைநாடு - ஐரோப்பா அமெரிக்கா முதலிய பூகண்டங்களிலுள்ள தேசங்கள். அல்லல் - துன்பம்.

# SAVITHIRI

Approved by the Director of Education, on the recommendation of the Educational Publications Advisory Board.

June, 1966 Price: 75 Cts.

**North - Ceylon Tamil Works Publishing House**

CHUNNAKAM

Printed at the Thirumakal Press, Chunnakam